உ

பஹவந்தர் துணே.

மூலிகைஜால ரத்தினம்.

இரண்டாம்பாகம்.

இஃது,
இராயவேலூர் கோட்டைவீதி
ம-ா-ா-ஸ்ரீ,
பண்டிட்
வே. ஸ்ரீ. பாலகிருஷ்ணமுதலியாரால்
எழுதப்பட்டு,

பூவிருந்தவல்லி,
பூ. சு. குப்புசாமிமுதலியாரது
ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
சென்னை-புரசை.
1921

இரண்டாம்பதிப்பு காபி-1000.

(Registered Copy Right)

இதன் விலை அணா-4.

உ

பஜறவந்தர் துணை

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகல அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் மற்றயாவர்களுக்குந் தெரிவிப்பதியாதெனில்:—

இந்த மூலிகைஜாலரத்தினம் இரண்டாம்பாகத்தை ம-ள-ள-ஸ்ரீ, வித்துவான் வேலூர் வே. ஸ்ரீ. பாலகிருஷ்ணமுதலியார் அவர்களால் எழுதி முடிவுபெற்றதை அடியிற் கையொப்பமிட்ட பூ. சு. குப்புசாமிமுதலியாராகிய நான் ஷையாருக்கு பொருளுதவிபுரிந்து சகல சுதந்தரமும்பெற்றுக்கொண்டு என்னால் அச்சிட்டுவெளிப்படுத்தி யிருப்பதால் இந்நூலையாவது, அல்லது, இதை வேறுபாஷையில் மொழிபெயர்த்தாவது, என் உத்திரவன்றி ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால், 1867-வருஷத்து 25-வது, ஆக்ட்டு 20-வது, பிரிவு 6-வது, விதிப்படி யான் கோரும் நஷ்டத்திற்கும், பினல்கோர்ட்டு செக்ஷன் குற்றத்திற்கும் உத்தரவாதிகளாக வேண்டுமென்பதைக் கவனிக்கக் கோருகிறேன்.

இப்படிக்கு,

பூ. சு. குப்புசாமிமுதலியார்.

ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடம்,

வேப்பேரிபோஸ்ட், மதிராஸ்.

விளம்பரம்.

துஷ்டப்பெண்களின் புணர்ச்சியினாலுண்டாகும் சகலமேக வியாதிகளுக்கும்

தேவசஞ்சீவியெண்ணெய்.

இந்த எண்ணெயானது 48-வித பச்சிலைமூலிகைகளாலும் 7-வித கடைசரக்குகளாலும் செய்யப்பட்டது.

இதனால் தீரும் வியாதிகளாவன.

அனேகமாய் ஸ்ரீகள்வியாதியினால் இரத்தங்கெட்டு திரேகம்வெளுத்து மயிர்களுதிர்ந்துபலயீனப்பட்டவர்களும், நெடுநாளாக திரேகத்தில்வூரிய மேகவெள்ளை, பால்வெள்ளை, மஞ்சள்வெள்ளை, ஒழுக்குவெள்ளை, நீருடன் நூலைப்போல்வருதல் தந்திமேகம், நீர்சுருக்கு, மூத்திரயெரிவு, நீர்தாரைக்கடுப்பு, குழிப்புண்கள், புரையோடுகிறபுண்கள், யோனியில்உண்டாகும்ரிணங்கள், லிங்கத்தில்உண்டாகும் கொறுக்குப்புண்கள், அரையாப்பு, தொடைவாழை, திமிர்வாய்வு, கைகால்விரல்களிலுண்டாகும்மேகப்பிடிப்பு, கிரந்தி, படைகிரந்தி, சிறுகிரந்தி, நுணுக்காய்கிரந்தி, இன்னும்பலவிதமான கிரந்திகளும், பலவித மேகத்தடிப்பு படைகளும், கைகால் குடைச்சல், எலும்புருக்கிமேகம், கைகால்ஊதல் முதலானவியாதிகளெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல்நீங்கி திரேகமும்முகமும் நல்ல பசுமையான காந்தியையுண்டாக்கும். இந்த யெண்ணெயை ஒருவிசை பரிட்சைசெய்தவர்கள் தமது பந்துமித்திருக்கும் சிபாரிசு செய்யும்படியான சந்தோஷத்தை ஆட்சேபனையின்றி யுண்டாக்கும்.

இதேவியாதி பெண்களுக்கிருக்குமாகில் புருடனைவிட அதிசீக்கிறத்தில் நிவர்த்தியாக்கும். உள்ளூரிலும் பிரதேசங்களிலும் அனேக ஜெனங்களின் துன்பங்களைநீக்கி சவுக்கியத்தையுண்டுபண்ணி அனுபவத்திற்குவந்தது.

ஆழாக்குஎண்ணெ யடங்கிய டப்பி ரூபா	2 0 0
அரையாழாக்குஎண்ணெ யடங்கிய டப்பி ரூபா	1 0 0

உ

பழநிவந்தர் துணை.

மூலிகைஜாலரத்தினம்.

இரண்டாம் பாகம்.

பதினெண்மர் துதி.

கலித்துறை.

கற்றுணுஞானக் கருத்தரிந்தோர்கள் கமலபதம்
பெற்றுணுஞ்சித்திப் பேரின்பக்கல்வி பிறவாதமுத்தி
வைத்தாலும்வெற்றி மருவியவர்பதம்வணங்கவும்யான்
சித்தாதிசித்தர் பதினெண்மர்தந்த திரவியமே.

1. பேய்பில்லிதீர.

சிறுசின்னிதொட்டால்வாடி சிவந்தநாவுரிக்கடம்பு
விரல்கொளுங்கருத்தகாக்கை வன்னிஆவாரைக்கொத்
நீரினில்மேல்நெருப்பு சேரவேபில்லிநீங்கும் [தான்
அறிவுளோர் அறிந்துகொள்ளும் அரும்பெருஞ் சேதி
[சொல்வாம்.

(இ-ள்.) சிறுசின்னி, தொட்டால்வாடி, சென்னயுருவி, நீர்க்கடம்பு, கருத்தகாக்கணும், வன்னி, ஆவாரை, முடக்கொத்தான், கொடிவேலிவேர், நீர்மேல்நெருப்பு, இதுகளை பசுவின்பால்விட்டிடித்துப் பிழிந்து மூன்று நாள் உள்ளுக்குக்கொடுத்து மேனுக்குத் துவாலையிட பேய்பில்லி தீரும்.

2. ராஜவசியம் லக்ஷுமிவிலாசமை.

தானென்றவல்லிமூலி தனிநிலப்பனங்கிழங்கு
மானதோர்மத்தஞ்சாரும் வசிகரம்செய்யவேண்டி

உன்னியகருவுந்தொட்டு ஒருநூறுஜெபித்தபோது
தானெனஉலகமெல்லாந் தனக்கவர்வசியமாமே.

(இ-ள்.) எலுமிச்சம் யிலையும், நிலைப்பனங்கிழங்கும், அரிதாரமும், ஊமத்தன் யிலைச்சாறும்விட்டு நன்றாய் மைபோலரைத்து அதில் சீதேவிசெங்கழநீர் சாறுவிட்டுக்கலந்து தத்திகைச் சிமிளில்வைத்து ஐயுங்கிலியும் நசி-நசி-மசி-மசி-வசி-வசி-சுவாஹா வென்று 1008 - ஜெபித்து திலர்தமிட இராஜவசியம், லக்ஷுமிவிலர்சமுண்டாகும்.

3. மோகனமை.

ஆனதோர்கொரவர்கட்டும் அரிதாரந்துடரிமூலம்
நானெனுக்திக்குமூலி நாரத்தம்பழமுஞ்சேர்த்து
வானெனும்மந்திரங்கள் வரிசையாய்நூறுஞ்சொல்லி
வேனெனமோகமாகு மிதுவுமேயுண்மையாமே.

(இ-ள்.) உள்ளாடை, அரிதாரம், துடரிவேர், நின்றிடங் தீஞ்சான்வேர், நாரத்தம்பழச் சாறுவிட்டரைத்து சிமிளில்வைத்து ஷ மந்திரம் 1008-உருவு ஜெபித்து மையிடும்போது ஆண்பிள்ளைகுடிக்கிற முலைப்பால்விட்டுக்கலந்து திலர்தமிட மோகனம்.

4. பேயாடாதிருக்க.

ஆடியபேயடங்கும் அக்கினிபேதமாகும்
நீடியகாரந்தன்னை நித்தமும்சொல்லும்போது
பாடியகருவைக்கேளாய் படியோட்டில்காக்கைதண்ணி
கூடியேபுதைத்தபின்பு கொள்ளுமிக்கருமமெல்லாம்.

(இ-ள்.) ஆடையொட்டிவேர், கருந்த காக்கணும்வேர் இது இரண்டும் வெள்ளி உதையத்தில் காப்புக்கட்டி தூபதீபங்கொடுத்து சாயங்காலம் சாவல்பெலிகொடுத்து வேர்பிடுங்கி குளிசமாடி ஓமம்வளர்த்துகிற யிடத்திலேயும் பேயாடுகிற யிடத்திலேயும் மா-யா-யீ-வென்று 108 - ஜெபித்து புதைக்க பேயாடாது ஓமம் வளராது.

5. வெட்டராதிருக்க.

எவரும்பார்க்கும்போது எதிரீடாய்நடுக்கவேண்டி
செல்லியேதொனியின்வேரைசுத்தியேநாவுஞ்சொல்ல
கல்லினுங்கடினமாகும் கத்தியுமழுங்கலாகும்
கொல்லரும்பகைவனுகக் கூறுவர்யேதோவென்றே.

(இ-ள்.) நத்தைச் சூரிவேரைக் காப்புக்கட்டி, தூப தீபங்கொடுத்து சாயங்காலம் சாவல் பெலிகொடுத்து வேர்பிடிங்கி (நா) வென்று 108-ஜெபித்து குளிசமாடி சிரசில்வைக்க வெட்டராது.

6. பேயாட.

மதிய துகிராணந்தன்னில் மத்தம்வேர்காப்புக்கட்டி
நிருவாணரூபங்கொண்டு நின்றுவேர்பிடிங்கிகொண்டு
கதியாகும்புகையைப்போட கண்டபே யோடுந்தானே
நிதியாகும்யிந்தவித்தை நிசூயமறிந்துபாரே.

(இ-ள்.) சந்திரகிராணம் பிடிக்கும்போது உன்மத்த ன்வேர்க்குக் காப்புக்கட்டி நிருவாணரூபமாய் நின்று வேர்பிடிங்கி வைத்துக்கொண்டு அதைத் தூளாய் செய்து சாம்பிராணியோடுகலந்துபுகைபோட ஆடாதபே யும் ஆடும்.

7. பாம்புவிஷம்நீங்க.

ஓணத்தில்சிறியாநங்கை ஒருமையாய்பிடிங்கிக்கொ
ண்டு, தீதுற்றஅறவுதானும் திட்டமாய்த் தீண்டும்பேர்
க்கு, நீதொட்டவேரால் தானும் நிலத்தினி லிறக்கினு
க்கால், வாதுற்ற விஷமும்தீரும் வையகம் போற்றுந்
தானே.

(இ-ள்.) சிறியாநங்கைவேரை திருவோணத்தில் கா ப்புக்கட்டி வேர்பிடிங்கி வைத்துக்கொண்டு ஷ்டி வே ரால் பாம்புகடித்தபேர்க்கு உச்சியிலிருந்து கால்வரை யில் நசி-மசி-வம்-டம்-டம் - யென்று மந்திரிக்க விஷம் நீங்கும்.

8. இந்திரியஸ்தம்பனம்.

அஷ்டமிநீலிவேரை அங்கனேகாப்புக்கட்டி
நவமியில்பிடுங்கிவந்து நலமுடன் முன்னேவைத்தால்
கட்டிடும்விந்துதானும் கலங்கிடும்பின்னேதானும்
தட்டியேயிதையறிந்து திடமுடன்லீலைசெய்யே.

(இ-ள்.) நீலிவேரை அஷ்டமியில் காப்புக்கட்டி, நவமியில்பிடுங்கிவந்து குளிசம்கட்டி அரையில்கட்டமுன்னிருக்க விழாது. பின்னிருக்க விழும்.

9. பெலி அறு திருக்க.

நத்தையின்சூரிவேரை நலமுடன்முன்போல்செய்து
கொத்தியேபிடுங்கிவந்து கொடும்பெலிதானந்தன்னில்
நத்தியேமிதித்துக்கொள்ள நருபடாவெட்டுதானும்
கத்தியுமழுங்கிப்போகும்கண்டுகொள்உண்மையாமே.

(இ-ள்.) நத்தைச் சூரிவேரை மேல் சொல்லியபடி வேர்பிடுங்கி பெலிகொடுக்கு மிடத்தில் இதைவைத்து காலில்மிதித்துக்கொள்ள வெட்டாறுது.

10. குளவி தேள் கொட்டாதிருக்க.

வீழிவேரருக்கன்கிராணம் விரும்பியேகாப்புக்கட்டி
நாழியில்வேர்பிடுங்கி நலம்பெறகுளிசம்செய்து
கோதையேவைத்துக்கொள்ளகொட்டிடாகுளவிதேளு
வாதையுமில்லையென்றே வறைந்தனர்முன்னோர்தானே.

(இ-ள்.) வீழிவேர் சூரியகிராணத்தில் காப்புக்கட்டி குளிசம்கட்டி வைத்துக்கொள்ள தேள் குளவி முதலானதும் கொட்டாது.

11. ஜெகவசியம்.

சீதசெங்கழுநீர்வேரை சீரிலெக்ஷுமியேயென்று
கூறியேபிடுங்கிவந்து குறிப்புடன் நூலைசுத்தி
தேறியேஆவின்னெய்யை திரமுடனிட்டுநீயும்
கூறியமையைவாங்கி குறிப்புடன்திலதம்தீட்டே.

(இ-ள்.) சீதேவி செங்கழநீர்வேரைக் காப்புக் கட்டி (ஓம்சிறிலெக்ஷுமி தேவியாவா) என்று 1008 - உருவு ஜெபித்து வேர்பிடிங்கி மேலே நூல்சுத்தி அதை ஓர் அகலில்வைத்து காராம்பசுவின்நெய்விட்டு தீபமேற்றி மேலேசட்டிகவிழ்த்து மைபிடித்து ஷி நெய்யும் புனுகும்கூட்டி மைசெய்து திலர்தமிடவசியம்.

12. திரிலோக வசியம்.

அருக்கனுள்ளமாவாசை அன்புடனெருக்கன்வேரை
நெருக்கியேகாப்புக்கட்டி நலமுடன்தீபமீந்து
மறைக்கவேமந்தவாரம் மந்திரம்நூறுஞ்சொல்லி
செருக்கியேதிலதம்தீட்ட ஜெகமெலாம்வசியந்தானே.

(இ-ள்.) வெள்ளெருக்கன் வேருக்கு ஞாயிற்றுக்கிழமை அமாவாசையன்று வெள்ளைத்தாமரைநூலால் காப்புக் கட்டி தேங்காயுடைத்து தூபதீபங் கொடுத்து ஸ்ரீங் காங் கீங் கூங் கணபதியென்று 1008-உருவு ஜெபித்து செவ்வாயன்றைக்கு வேர்பிடிங்கிவந்து கோரோஜனை, குங்குமப்பூ, பச்சைகர்ப்பூரம்கூட்டி அரைத்து திலர்தமிட திரிலோகவசியம். ஞாயிற்றுக்கிழமைமுதல் செவ்வாவரையிலும் செடியண்டை தூபதீபமும் மந்திரமும் ஜெபிக்கவேண்டும்.

13. தேவவசியம்.

நாகமல்லிவேர்பிடிங்கி நலமுடன்நிழலுலர்த்தி
பாகமாய்பொடியாய்செய்து பண்புடன்திரியிலூட்டி
தாகமாய்காராநெய்யில் தகைமையாய்மைபிடித்து
வாகமாய்திலதம்தீட்ட வசியமாம்தேவரெல்லாம்.

(இ-ள்.) நாகமல்லி செடிக்குக் காப்புக் கட்டி ஜெப ஜெய ஓம் கிரியும் பகவதாயென்று வேர்பிடிங்கி நிழலிலுலர்த்தி பொடிசெய்து திரியிலூட்டி திரிதிரித்து காராம்பசுநெய்யில் மேலே சொல்லியபடி மைபிடித்து திலர்தமிட்டு பூஜைகள் மந்திரங்கள் செய்தால் ஷி தேவதைகள் அதிசீக்கிரமாய் வசியமாகும்.

14. தேள்விஷம் நீங்க.

கெட்டியாம்குருவண்டுக் கூடுதன்னில்
கெடியானகளஞ்சிரச மதனுள்தாக்கி
தட்டியேமண்டலந்தான் சென்றபின்பு
தனுவர்னகழற்சிக்கு ளடைத்துக்கொள்ளே.
கொள்ளுவாயதன்வாயைக் கொம்பால்மூடித்
தேள்கொட்டிவந்தபே ரிடத்திலீயத்தீரும்
நள்ளுவாய்க்கரத்திலிருந்து கீழேபோட்டால்
நலமகன்றவிஷங்களெல்லாம் நாட்டாதாமே.

(இ-ள்.) குருவண்டுக் கூட்டில் களஞ்சிரசம் விட்டு மண்டலஞ் சென்று எடுத்து கெச்சக்காயிற்குள் ஷை ரசத்தை விட்டு ஷை துளைக்கு குச்சியினல் ஆப்படித் துவைத்துக்கொண்டு தேள்கொட்டினபேருக்கு கையில்கொடுத்து கீழேபோடும்படி செய்தால்விஷம்இறங்கி விடும்.

15. விஷமிறங்க மோதிரம்.

நெட்டுவாயரணைபச்சை பாம்பினேடு
நிலையானபச்சோந்தி மூன்றுவாலும்
வெட்டுவோய்செம்முள்ளி வேராலப்பா
விதமாகவிதுநாலுங் கொண்டுவாயே.

கொண்டுவந்துமுன்செம்பி லூட்டிவைத்துக்
கொடிதானபவுத்ரநடு விரலிற்போடு
கண்டுவாவிஷந்தொட்டு வந்தானுகிற்
கருவானமுன்மந் திரத்தைச்சொல்லி
உண்டுவாமூன்றுதரங் கொட்டிவிட்டு
உத்தமனேநிறைகுடத்திற் கழட்டிப்போடு
விண்டுவரவிஷமிறங்கிக் கீழேநிற்கும்
வேகமதாய்க்குடநீரைக் கவிழ்த்துப்போடே.

(இ-ள்.) அரணை பச்சைப்பாம்பு பச்சோந்தி இதுகளின்வாலும் செம்முள்ளி வேரும் ஒன்றுசேர்த்து செப்புத்தகட்டில் சுத்தி மோதிரம்போல்செய்து ஓம் கிலி

[redacted]

வசிவா என்று 108-ஜெபித்துவைத்துக்கொண்டுதேள் கொட்டினபேருக்கு பவுத்திரவிரலிலாவது நடுவிரலிலாவதுபோட விஷமெல்லாம் மோதிரத்திலிறங்கிவிடும் பிறகு மோதிரத்தை ஒருகுடம்ஜலத்தில் போட்டுகொஞ்சநேரம் பொருத்து ஜலத்தைக் கவிழ்த்துவிட விஷமெல்லாம் ஜலத்தில்போய்விடும் பிறகு மோதிரத்தை எடுத்துவைத்துக் கொள்ளவும்.

16. விஷமிரங்கப் புகை.

பாரப்பாபுகையிலையும் மயிலிரகினோடு
பண்பான்வெள்ளெருக்கன் வேருங்கூட்டி
சீரப்பாசுருட்டுபுகை குடித்தாயானாற்
சிறப்பானகொட்டுவிஷந் தீரும்தீரும்
சாரப்பாஉப்பதனை பொடித்துவைத்துச்
சார்வானபூரமது கொளித்திவைத்து
நேரப்பாகண்சிரட்டை கொண்டுமூடி
நிலையாகக்கடித்தவிடங் காட்டப்போமே.

(இ-ள்.) புகையிலையும் மயிலிரகும் வெள்ளெருக்கன் வேரும் ஒன்றுசேர்த்து சுருட்டுசெய்து புகை பிடிக்க தேள்விஷம் தீரும். உப்புத்தூள் மத்தியில் கர்ப்பூரம் வைத்துக்கொளுத்தி மேலே கொட்டாங்கிச்சிமூடி ஷெதுளையின் வழியாய்வரும் புகையைகொட்டின விடத்தில் காட்டத்தீரும்.

17. விஷமிரங்க வேறுவகைகள்.

போமென்றகுரும்பியையுந் தடவிக்காட்ட
பொல்லாதகொட்டுவிஷந் தீரும்தீரும்
நாமென்றசிறியாநங்கை வேரைத்தின்றால்
நல்லதொருவிஷமெல்லாம் நாடாதோடும்
வாமென்றசடைச்சிவே ரரைத்துத்தின்ன
வல்லதொருவிஷங்களெல்லாம் வாங்கும்வாங்கும்
ஆமென்றசீந்திற்றண்டின் பாலையுண்ண
அறியாதவிஷங்களெல்லாம் அகன்றுபோமே.

(இ-ள்.) தேள்கொட்டின விடத்தில் காதுக்குரும்பியைத்தடவி அனல்காட்ட விஷந்தீரும். சிறியாநங்கை வேரைத் தின்றால் பாம்புவிஷம்முதல் சர்வவிஷமும் தீரும். சடைச்சிவேரை அரைத்துத்தின்ன சர்வவிஷங்களும் போகும். சீந்தில்தண்டின் பாலையுண்ண அறியாத விஷங்களெல்லாம் அகலும்.

18. மிருகங்கள்விலக மூலிகை.

தானென்றமூலிநரி விரட்டிக்கப்பா
    தப்பாமலாதித்த வாரந்தன்னில்
வேனென்றமூன்றுநூல் காப்புக்கட்டி
    விதமாகவேகொளுத்தி தூபதீபம்
வானென்றபழந்தேங்காய் நிவேதனமேசெய்து
    வண்மையுடன் ஓம்சடாசடாவென்று
ஆனென்றஆயிரத்தெட்டுருஜெபித்து
    அவ்வேரைமறுவாரம் பிடுங்கிக்கொள்ளே.

கொள்ளுவாய்சேவலதை பலிகொடுத்துக்
    குறியானவேரையுநீ பிடுங்கிக்கொண்டு
நள்ளுவாய்நிழலுலர்த்திச் சூரணித்து
    நலமானசெப்பதனில் வைத்துக்கொண்டு
அள்ளுவாய்முன்னுருவைத் தியானஞ்செய்து
    ஆச்சரியமந்திரத்தால் மிருகஞ்சேராது
விள்ளுவாய்வேம்பினுக்குக் காப்புக்கட்டி
    வேர்பிடிங்கிகுளிசத்தில் அடைத்துக்கொள்ளே.

(இ-ள்.) ஞாயிற்றுக்கிழமை நரிமிரட்டிக்கி மூன்றுவர்னநூலால் காப்புக்கட்டி தூபதீபங்கொடுத்து பழந்தேங்கா யுடைத்து நிவேதனஞ் செய்து ஓம் சடா சடா வென்று 1008-உருஜெபித்து மறுவாரம் வரையிலும் தூபதீபங்கொடுத்து அடுத்த ஞாயிற்றுக் கிழமையில் சாவல்பெலிகொடுத்து வேர்பிடுங்கி நிழலிலுலர்த்தி சூரணஞ் செய்து செம்புடப்பியில் வைத்துக் கொண்டு ஒருசிட்டிகைதூள்எடுத்து மேல்படிமந்திரம்

…த்து மிருகங்களின்மேல் தூவ சர்வமிருகங்களும் …டம்பிடிக்கும்.

19. பேய்களைமிரட்டமூலிகை.

கு…காள்ளவேமுன்னுருநீ தியானஞ்செய்துக்
வி…றியாகமுன்பறந்தான் பிடிங்கிக்கொள்ளு
வி…ள்ளவேபிசாசமெல்லாம் வெண்டோடிப்போம்
…ழியடக்கிக்கட்டிவிடில் பிசாசுபோமே.

(இ-ள்.) வேப்பமரத்துக்குமேல் (18) ல் சொல்லிய …படியே காப்புக்கட்டி மந்திரம்ஜெபித்து முன்புறமிரு…க்கும் வேரைவெட்டி குளிசங்கட்டிக்கொள்ள பேய்க…ளெல்லாம் ஓடும்.

20. அஞ்சனம்.

…செய்வதற்குஅஞ்சனத்தைச் சொல்லக்கேளு
ஐ… செப்பரியபிரம்ம ராகாசிப்பூத்தான்
…வருக்குந்தனித்துஒரு மூலிபார்த்து
கை…ஆதியாம்வாரனிட காப்புக்கட்டி
கர்ப்பூறற்குபழந்தேங்காய் சர்க்கரைப்பால்
மெய்யாகனம்பொங்கலா லாத்திதூபம்
விளம்பியேஆத்திட்டு * அனுமார்தோத்திரம்
…ரத்தெட் டுருத்தானேதே.

(இ-ள்.) தனித்திரு…
…ற்றுக்கிழமைக் காப்புக்கும் பிரம்மதண்டுசெடிக்கி ஞா… சர்க்கரை கர்ப்பூரம் பொங்கல்டி பழம் தேங்காய் பால் கொடுத்து அனுமார்தோத்திரம் தூபதீபம்முதலியதும் ஆயிரத்தெட்டுஉருவு ஜெபிக்கவும்.

ஓதியேவேரறு தெடுத்துவந்து
உண்மையுடனுலர்த்திநன்றாய் தூ…
…ரன்…

* அனுமார் மந்திரம் "மாந்திரீகமணியம்" என்னும் புத்தகத்தில் பார்வையிடவும்.

ஓதியேபின்னுமொரு விபரங்கேளு
உற்பனமாங்கருச்சீலை தன்னிலூட்டி
சாதகமாய்திரியாக்கி வெள்ளிவாரம்
தனிலாடுஞ்செக்கி லெண்ணைவாங்கி
ஓதியேதிரியிட்டு எண்ணைவார்த்து
உற்பனமாஞ்சிரசோட்டில் தீபமேற்றே.

(இ-ள்.) பின்பு வேராருமல்பிடுங்கி நிழலில் உலர்த்தி தூள்செய்து கருச்சீலையில்பரப்பி திரிசெய்து சிரசோ ட்டில்வைத்து வெள்ளிக்கிழமையாடுஞ் செக்கெண்ணை விட்டு தீபமேற்றவும்.

ஏற்றியேயானைக்கண் சட்டிமூடி
இயலாகமையெறித்து வாங்கும்போது
போற்றியேசேர்டசோப சாரத்தோடு
புகலரியஅநுமானை மனதிலுன்னி
சாற்றியேஅதையெடுத்து வைத்துக்கொண்டு
தனிக்கோரைப்படாபூனைக் கண்ணன்கையில்
ஆற்றியேவைத்துப்பின் அடைவதாக
அஞ்சனதேவியின் மந்திரமுஞ்செப்பே.

(இ-ள்.) மேலே யானைக்கண் சட்டிமூடி மையெறி த்து வாங்கும்போது சோடசோப சாரத்துடன் அநு மானை தோத்திரஞ்செய்து வைத்துக்கொண்டு கோ றைபடாத பூனைக்கண்ணன்கையில் வைத்து அஞ்சன தேவி மந்திரஞ்செப்பே.

செபித்தந்தஅநுமனிட பாதஞ்சேவி
செப்பரியவடுகனிட பாதஞ்சேவி
செபித்தந்தசத்தியிந்தன் பாதஞ்சேவி
சிந்துரனைக்கந்தனையும் திரகால்பூசி
செபித்திந்தபடியாகச் செய்வாயானல்
செயலாகமண்பிளந் துருவிநாடும்
•செபித்திந்த தனமெடுக்கத் தந்திரஞ்சொன்னேன்
தின்னமொடுஇன்னுமொரு அஞ்சனங்கேளே.

21. கீழாநெல்லி அஞ்சனம்.

அஞ்சனங்கள்புற்றுமேல் கீழ்க்காய்நெல்லி
யப்பனே தனித்திருக்கு மதனைப்பார்த்து
மஞ்சனூலாதிநாள் காப்புக்கட்டி
மற்றுநாள்நிருவாண ரூபத்தோடே
கஞ்சிமாம்பெலிகொடுத்து தீபதூபங்
காட்டியேநாதாக்கள் சாபந்தீர்ந்து
கொஞ்சியேசமூலந்தான் கொண்டுவந்து
குயவனிடசூளையிலே மலர்ந்தவோடே.

மலைந்தவோடெடுத் தடுப்பில்வைத்து
மூலிவளமாகஅதிலிட்டு எடுத்துநன்றாய்
கருக்கிக்கொஞ்சம்புற்றுத் தேன்நாடாட்டால்
பூவிநெய் காராவிநெய்
வலிமைபெறஇவைகளிலே குழைத்துப்போட்டு
வடுகனையுங்கந்தனையும் வணங்கிப்போற்று.
தலைமையுள அனுமானைச் சாதித்தோதி
தன்கையிலஞ்சனமூலி யோடும்பாரே.

(இ-ள்.) புற்றின்மேல் முளைத்திருக்கும் கீழ்க்காய் நெல்லி செடிக்கு ஆதிவாரம் மஞ்சள்நூலால் காப்புக் கட்டி மற்றுநாள் நிர்வாணரூபத்துடன் தூபதீபம் பெ[illegible]முதலியதும் கொடுத்து அனுமார் மந்திரம் சொல்லி சாபநிவர்த்தி முதலியதும்செய்து வேர்பிடுங்கிக் கொண்டு குயவன்சூளையில் மலர்ந்தஓட்டைஎடுத்து அதில் ஷை வேரைப்போட்டு கரிக்கி புற்றுத்தேன் அல்லது காராம்பசுவின் நெய்விட்டுக் குழைத்து கணபதிசுப்பிரமணியர் முதலியோரைவணங்கி அனுமான் பூஜைசெய்து போட்டுப்பார்க்க அஞ்சனம் ஓடும்.

22. இராஜவசியம் சர்வவசியம்.

பாரேநீவெள்ளெருக் காவாரேதன்னைப்
பரிவாகவடவேரைக் காப்புக்கட்டி

சேரேநீதிங்களிலே யுதையாதித்தன்னில்
 தீபமுடன் தூபமும் நைவேத்தியஞ்செய்து
வேரேநீயெடுத்துவெள்ளை விஷ்ணுக்கிராந்தி
 வேரையுமுன்போலக் காப்பிட்டெடுத்துவந்து
சேரேநீயிந்திரமாங் கோபப்பூச்சி
 திகழ்புனுகுகோரோஜனை யாவுங்கூட்டே.

(இ-ள்.) ஞாயிற்றுக் கிழமையதினம் வெள்ளெருக்கு, ஆவாரை, வெள்ளை விஷ்ணுகிராந்தி ஆகிய மூன்று மூலிகைகளுக்கும் காப்புக்கட்டி மறுநாள் திங்கட்கிழமைஉதையத்தில் தூபதீப நைவேத்தியஞ்செய்து ஷை வேர்களைப்பிடிங்கிக்கொண்டு அத்துடன் தம்பலப்பூச்சி, புனுகு, கோரோஜனை யாவுங்கூட்டி,

கூட்டடாமுற்கருவும் இளநீராலாட்டிக்
 குன்றிபோலுண்டைசெய்து நிழலுலர்த்தி
தீட்டுவதுமுலைப்பாலில் மயக்கம்நீரில்
 தேனில்நீராவின்பால் தன்னிலொன்று
ஊட்டியேமோகினி மந்திரத்தையோதி
 யுகமையுடன்புருவத்தில் திலதந்தீட்டு
நீட்டியேயரசனுங்கை வசமதாவான்
 நிஜமாகபூதமிருகம் வணங்குந்தானே.

(இ-ள்.) மேல்சொல்லிய தினுசுகளை ஒன்றுசேர்த்து இளநீர்விட்டரைத்து மாத்திரைகளாகக்கட்டி நிழ... உலர்த்தி மோகினி மந்திரம் பூஜைசெய்து வைத்துக் கொண்டு முலைப்பாலிலாவது, தேனிலாவது, பசும்பாலிலாவது இழைத்து புருவமத்தியில் திலர்தம் போட இராஜவசியம், சர்வவசியம், மிருகவசியம் முதலியது யாவும் பலிதமாகும்.

23. வில்வவேர்வசியம்.

வணங்கவேபாதிநா ளம்மாவாசி
 திருவாதிரைநாள் மூன்றுமொன்றாய்

இணங்குநாள்தனில்வில்வ வடவேர்தன்னில்
இதமானகன்னிநூல் காப்புக்கட்டி
பிணங்காமநிருவாண ரூபங்கொண்டு
பெட்புடனேதீபமொடு தூபங்காட்டி
மணங்காமலக்ஷமுரு வசியமோதி
மைந்தனேவேர் தூக்கி வடவேர்வாங்கே.

(இ-ள்.) ஆதிவாரம் அமாவாசை திருவாதிரை நக்ஷத்திரம் மூன்றுமொன்ருய் சேரும்போது வில்வமரத்துவடவேருக்கு கன்னிநூலால் காப்புக்கட்டி நிருவாணரூபத்துடன் தூபதீபங் கொடுத்து வசியமந்திரட லக்ஷம் உருஜெபித்து வேரைவாங்கி தங்கத்தாயத்தைக்குள் போட்டு வைத்துக்கொள்ள மகத்தான வசியமாகும்.

24. வெள்ளெருக்கம்வேர் வசியம்.

வாங்கவேபற்குளிச மாறிக்கட்டி
மகத்தானவசியமெலா மாடும்பாரு
தேங்காதேவெள்ளெருக்கில் இன்னமொன்று
செப்புகிறேன்சித்தர்கள்தான் செய்யுமார்க்கம்
தாங்கியேவெள்ளெருக்கு மூவாண்டேகித்
தனித்துநின்றமூலவேர் தேடிப்பார்த்து
ஆங்கியேஅதைச்சுற்றிக் குழிதான்வெட்டி
அப்பனேகுழிநிரம்பத் தண்ணீர்வாரே.

(இ-ள்.) மூன்றுவருடம் சென்ற வெள்ளெருக்கஞ் செடியை தேடிப்பார்த்து அதைச்சுற்றி குழிவெட்டி குழிநிரம்பத் தண்ணீர்வார்த்து ஊரவைக்கவும்.

தண்ணீர்வார்புனர்பூசம் பூசமாதல்
தருவானஆதிநாள் பார்த்துநன்ருய்
தண்ணீராமாணிவேர் கண்டமட்டும்
சாதகமாய்வெட்டியடி மூலங்கண்டு
அண்ணவேதேங்காய்போல் கிழங்குதோன்றி
அடியினிற்குமாணிவேர் முன்மையத்தில்

திண்ணமாநாற்றிசையும் போகும்வேரைத்
திரமாகச்சேர்த்துப்பின் செப்பக்கேளே.

(இ-ள்.) ஞாயிற்றுக்கிழமை புனர்பூசமாவது பூசமாவது வருங்காலத்தில் ஷை செடியின் அடிவரைக்கும் தோண்டிப்பார்க்கையில் வேர்களுக்கு மத்தியில் தேங்காய்போல் கிழங்கிருக்கும் அதன்நாற்புரமும்போகும் வேரை ஒன்றாய்ச்சேர்த்து,

கேளப்பாகன்னிநூல் காப்புக்கட்டி
கீழ்முகத்தில்பாற்பொங்கல் தூபதீபம்
வாளப்பாவெண்சாவல் பலிதானிட்டு
வசியமுதல்மாரணத்தை மாறுமாறு
ஆளப்பாதம்பனத்தில் லக்ஷமுருவோது
அழைப்பென்றஆக்ரஷ்ணத்தை யோதுவோது
தேளப்பாநிருவாணங் கொண்டேயோதி
திகழ்வேரைவெவ்வேராய் பிரித்துவாங்கே.

(இ-ள்.) கன்னிநூலால் காப்புக்கட்டி கிழக்குத் திக்கில் பால்பொங்கல் தூபதீபம் முதலியதும் கொடுத்து வெள்ளைச் சாவல் பெலியிட்டு வசியமுதல் ஆக்ரஷ்ணம்வரையிலுள்ள அஷ்டமாசித்து மந்திரங்களை நிருவாணமாய் நின்று ஜெபித்து வேரெல்லாம் வெவ்வேராய் பிரித்து எடுத்துக்கொண்டு,

வெவ்வேரேவாங்கியே குளிசங்கட்டு
விதமாகஅடியினிற்குங் கிழங்கைவாங்கி
செவ்வையுடன்விநாயகனைப் போலேசெய்து
சிறப்பானபறிதகட்டில் அறுகோணமாக்கி
ஒவ்வியேமுக்கோணத் துள்ளேயிட்டு
ஓங்காரசுற்றிமேல் வட்டமாக
நவ்வாகஓங்கார மேலேமைந்தா
நாற்கோணமிட்டினிமேல் நவிலக்கேளே.

(இ-ள்.) குளிசங்கட்டி வைத்துக் கொள்ள அஷ்டமாசித்துமாடும். ஷை அடியில்நிற்கும் கிழங்கை விநா

யகனைப்போல் உருவுசெய்து வைத்துக்கொண்டு தங் கத்தகட்டில் அறுகோணம் கீறி மேலேஓங்காரம் போட்டு ஓங்காரத்திற்குமேல்நாற்கோணம் சதுரமாகக்கட்டவும். ஷை அறுகோணத்தின் மத்தியில் முக்கோணம்போட்டு ஷை முக்கோணத்தின்மத்தியில்வட்டம்போட்டு அதில் றீ என்னும் எழுத்தைப்போட்டு,

நவிலவேநடுநின்ற முக்கோணத்தின்
நலமானவட்டமதில் றீங்காரமிட்டு
நவிலவேயறுகோணம் ஓம்நமசிவாய
நாற்சதுரகோணத்தில் லங்கங்கென்று
நவிலவேகேசரியா மூலமப்பா
நல்லஐயுங்கிலியுஞ்சவ் வோடுகாட்டி
நவிலவேயிப்படியே தகடுசெய்து
நலமானவிபூதிமேல் பரப்பிடாயே.

(இ-ள்.) அறுகோணங்களிலும் ஒ-ந-ம-சி-வ-ய-என்னும் ஆறெழுத்தைப்போட்டு நாற்சதுரத்திற்குள்-லங்கங்-ஐயும்-கிலியும் சவ்வும்என்று எழுதிக்கொள்ள சக்கரம்பூர்த்தியாகும்,

பரப்பியேஅடிமூல விநாயகனேக்கேளு
பாகமாய்குரைபடா தலைமண்டையோடு
உய்துமேஅதின்மேலே மண்திண்ணைபோட்டு
ஓங்காரமிட்டதின்மே லிருந்துக்கொண்டு
அய்துமேமசாணமா காளிகோஷ்டம்
அல்லாட்டாலில்லறமே மயானமென்று
பரப்பிடுவாய்விபூதியின்மேல் விநாயகனைவைத்து
பக்ஷமுடன்மேல்நோக்கி ஸ்ரீங்கென்றேதே.

(இ-ள்.) பூர்த்தியாயிருக்கும் தலைமண்டை ஓடு கொண்டுவந்து குழிவெட்டிப்புதைத்து அதின்பேரில் மண்திண்ணைபோட்டு ஷை திண்ணையின்பேரில் விபூதி பரப்பி அதன்மேல் ஷை சக்கரம் எழுதிய தங்கத்தகட்

டைவைத்து அதன்மேல் ஷ விநாயகரை வைத்து ஸ்ரீங்கென்றேதவும் இம்மாதிரி மசானத்திலாவதுகாளி கோயிலாவது அல்லதுவீட்டிலாவது செய்யவும்.

பரத்தியதின்மேலே கணபதியைவைத்துப்
பாங்கானசோடசோப சாரத்தோடே
உரத்தியேசுத்திசெய்து நாளொன்றுக்கு
உச்சிமுதல்அந்திசந்தி மூன்றுகாலே
காத்தினிலேசிவந்தபுட்ப மெடுத்துச்சாத்திக்
காட்சிபெறஆயிரத்தெட் டுருத்தானேது
பரத்தியேமண்டலந்தானேதினாலே
பாரியதோர்பகையெல்லாம் நசித்துப்போமே.

(இ-ள்.) ஸ்ரீங்-ஒங்-றீங்-அங்-உங்-மங் - ஓம் சிவகண தேவாயாநமாவென்று 1008-உருவு மூன்று வேளையும் சிவந்தப் புஷ்பத்தால் அர்ச்சனை செய்து மண்டலம் அதாவது நாற்பதுநாள் ஜெபிக்க சித்தியாகும். பகை யெல்லாம் ஒழிந்துவிடும்.

போமென்றபூதிதனை யெடுத்துப்பாரு
பொன்மாதளம்பூப்போல் வன்னமாகும்
ஓமென்றஉதையாதி எடுத்துநெற்றில்
உத்தமனே அணிந்திடவே வசியமாகும்
வேமென்றஆறுபத்துச் சித்துமாடும்
மெல்லியர்கள்மேல்விழுந்து மயங்குவார்கள்
வாமென்றஅரசருப சாரஞ்செய்வார்
வணங்காததேவதைகள் வணங்கும்பாரே.

(இ-ள்.) மண்டலம் பூஜைசெய்த பிறகு ஷ விபூதி யானது குங்குமம்போல் சிவந்துவிடும். அதை உதை யாதிதனில் நெற்றியில் அணிந்திட ஜனவசியம் இரா ஜவசியம். ஸ்ரீவசியம் முதல் அறுபத்துசித்து ஆடும்.

25. கருமத்தன் மூலிகை.

தயவாகக்கருமத்தன் பூடுக்கப்பா
தாயானவெள்ளியன்று காப்புக்கட்டி

மயமாகுமந்திரந்தான் கேளுகேளு
ஓம்-வங்-வங்-அம் அம்மென்றோது
பயமப்பாவாகாது வுருவோநூறு
பாடினேன்செவ்வாயிற் பிடுங்கும்போது
நயமாகபெலியீந்துக் கொடுத்துமேதான்
நலமாகவயிறவர்க்கு பூஜைகொள்வே.

(இ-ள்.) கருமத்தன் செடிக்கு வெள்ளிக் கிழமைக் காப்புக்கட்டி ஓம்-வங்-வங் - அம் - அம் என்று நூறு உருவு செவ்வாய்க்கிழமை வரையிலும் ஜெபித்து செவ்வாய்க்கிழமை பிடுங்கும்போது பலிகொடுத்து வயிறவர்க்குப் பூஜைசெய்து,

கொள்ளவேகன்னியுட நூலால்சுத்தி
குருதியாய்ச்செம்பினிட சத்திலிட்டு
விள்ளுகிறேன்முன்னுருவைத் தியானம்பண்ணி
வெடிமுகத்திற்றான்புதைக்கக் குண்டோது
கள்ளனுயிருக்கிற பேர்கள்கண்டால்
கைகட்டித்தான்வணங்குங் கருதிப்பாரு
வெள்ளியென்ற கிழமைக்குச் சொல்லுகிறேன்கேள்.
விஷ்ணுகிராந்திக்குக் காப்புக்கட்டே.

(இ-ள்) வேர்பிடுங்கி மேலே கன்னிநூல்சுத்தி செம்புத்தாயத்தைக்குள்போட்டு முன்மந்திரத்தைத் தியானஞ்செய்து வெடிபோடு மிடங்களில் புதைக்க குண்டானதுவெளிவராது கள்ளர்கள் பயப்படுவார்கள் வெள்ளிக்கிழமை விஷ்ணுகாந்திக்குக் காப்பு கட்டி,

26. விஷ்ணுமூலி வசியம்.

கட்டிவிடுமந்திரமோ சொல்லக்கேளு
கருதினில்லுமைந்தனே கருக்காட்டாதே
செட்டிவிடும்விசுவிசுகாங்கிங் அம்சிவாயென்று
உறையடாமந்திர முருநூறு
வெட்டிவிடுகிடாவொன்று பொங்கலிட்டு
விவரமாய்த்தான்பிடிங்கி வைத்துக்கொண்டு

பட்டியிலேதான்புதைக்க பிணியண்டாது
பலருக்கும்வசிகரமாம் பாருபாரே.

(இ-ள்.) விசு-விசு-காங்-கிங்-அம்-சிவா என்று நூறு வுருவுஜெபித்து ஆட்டுக்கிடாய்வெட்டி பொங்கலிட்டு தூபதீபங் கொடுத்து வேர்பிடுங்கி காரீயக் குழையில் போட்டு பட்டியில்புதைக்க ஆடுமாடுகளுக்கு யாதொருவியாதியும் அண்டாது. இக்குளிசத்தை சிரசில்வைத்துப்போக சகலவசிகரமும் உண்டாகும்.

27. பேய்உச்சாடனமூலி.

பாரடாயின்னுமொரு மூலிகேளு
பாங்கானவன்முருங்கை காப்புக்கட்டி
நேரடாதிங்கள்நறுந் தூபமிட்டு
நிசமாகப்பெலியொன்று செவ்வாய்க்கீந்து
மாரடாமந்திரந்தான் சொல்லக்கேளு
வம்-மம்-வாவா-சி-அம்-இம் ஓமென்றோது
சேரடாஉருநூறு ஜெபித்துக்கொண்டு
திடமாகப்பெலிகொடுத்து வாங்கிவையே.

(இ-ள்.) திங்கட்கிழமை தவசு முருங்கைக்குக் காப்புக்கட்டி தூபமீந்து செவ்வாயன்றைக்கு பலிகொடுத்து (மந்திரம்) வம் . வம் - வா - வா - சி - அம் - இம்- ஓம் யென்று நூறுஉருவுஜெபித்து வேர்பிடுங்கிக் கொள்ளவும்.

வையப்பாதாமரையின் நூலால்சுற்றி
மைந்தனேசாம்பிராணி தூபமிட்டு
உய்யவேபேய்களுக்கு உச்சாடனமுமாகும்
உத்தமனேநமனுன விஷத்துக்காகும்
பையவேயின்னுமொரு மூலிகேளு
பரிவானஅமுக்குரு பாருபாரு
வையகத்திற்பேயெல்லாம் நில்லாதோடும்
மங்கையர்க்குக்கட்டவே கெர்ப்பமுண்டாமே.

இரண்டாம்பாகம்.

(இ-ள்.) ஷ வேருக்கு தாமரைநூல் சுற்றி சாம்பிராணி தூபங்கொடுத்து கட்டிக்கொள்ள பேய்கள்உச்சாடனமாகும்,

ஆமப்பாஞாயிறு அம்மாவாசி
அந்தநல்லவேளையிலே காப்புக்கட்டி
தானப்பாமூன்றுநா ளுருவேபோடு
தப்பாதேமந்திரந்தா னேதேயாகில்
வாகுமப்பாஓம்க்ஷணம் பிறீம்இறீமென்று
வகையாகஉருநூறு தியானம்பண்ணி
நாமப்பாநூலாலே கட்டிக்கொண்டு
நன்மையாய்வைத்திருக்கப் பசாசுபோமே.

(இ-ள்.) ஷ அமுக்குருவேரை ஞாயிற்றுக்கிழமை அமாவாசை கூடியநாளில் காப்புக்கட்டி மூன்று நாள் பிறீம் இறீம் என்று தினம் நூறு உருவு ஜெபித்து நூலால்குளிசங்கட்டி வைத்துக்கொள்ள பிசாசு நீங்கும் பெண்களுக்கு கெர்ப்பம் உண்டாகும்.

28. படைமுறிய.

வைத்திருக்கயின்னமொரு மூலிகேளு
வசியென்றதாமப்பா நாளோபூசம்
வைத்திடவேவாரமப்பா ஞாயிறுகும்
தயவாகவெள்ளெருக்கில் காப்புக்கட்டி
நித்தமப்பாமூன்றுநாள் பெலிகொடுத்து
நிஜமாகப்பிடுங்கியதை பட்டுநூலால்சுற்றி
பத்தியாய்பொன்சிமிளி லடைத்துக்கொண்டு
படைமுகத்திற்போய்விடுநீ விலகும்பாரே.

(இ-ள்.) பூசநக்ஷத்திரம் ஞாயிற்றுக்கிழமையில் வரும்போது வெள்ளெருக்கு செடிக்கு காப்புக்கட்டி மூன்றுநாள்பெலிகொடுத்து வேர்பிடிங்கிபட்டுநூலால்சுற்றி பொன்தாயத்தைக்குள்போட்டுகட்டிக்கொண்டுபடைமுகத்தில்போக எதிராளிகள் ஓடிவிடுவார்கள்.

29. வசியமூலிகைகள்.

விலகவேமூலியுண்டு சொல்லக்கேளு
வெண்குன்றிவேருக்குக் காப்புக்கட்டி
தலையிலேஅமுதுவைத்து படைத்துக்கொண்டு
தயவாகக்கிடாவொன்று பெலியுமீந்து
கலையிலேகயிற்சுத்தி கையில்கட்டி
கடுகவழிநடக்கவே நடைதோணுது
இடையிலேயிறுத்திவிடு சொல்லைத்தட்டார்
எல்லவர்க்குநல்லவனென் றியம்புவாறே.

(இ-ள்.) வெண்குன்றிவேருக்குக் காப்புக்கட்டி ஆட்டுக்கிடா பலிகொடுத்து வேர்ப்பிடிங்கி கையில் கட்டிக் கொள்ள எல்லாற்கும் நல்லவனுக எண்ணப்படுவான்.

இயம்பவேமூலியொன்று ரெண்டுக்குந்தான்
எண்ணிவிடுமந்திரமே யொன்றுமாகும்
சயம்பெறவேகருங்குன்றி வேருக்கப்பா
சொல்லுகிறேன்மந்திரந்தான் சூக்ஷங்கேளு
மயம்பெறவே-கங்-கங்-லம்-லம்-சிவாயநமாவென்று
மைந்தனே இறுநூறு உருவேபோதும்
பயம்பெறவேகிடாவொன்று பெலியுமீந்து
பக்குவமாய்ச்சொன்னத்தி லடைத்துக்கட்டே

(இ-ள்.) மேற்சொல்லிய மூலிகைக்கும் அடியில்சொல்லும் மூலிகை இரண்டிற்கும் மந்திரம் ஒன்றேயாகும் கருங்குன்றி வேருக்குக் காப்புக்கட்டி - கங் - கங்-லம் லம் - சிவாயநமவென்று இருநூறு ஜெபித்து கிடாபெலிகொடுத்து வேர்பிடுங்கி சொர்னத்தில் அடைத்துக் கொள்ளவும்.

கட்டியபின்விஷக்கடியு மோடிப்போகும்
கைகடந்தமுறைக்காய்ச்சல் காணுதோடும்

முட்டிவிடும்பேய்களைத்தா னாட்டங்கொள்ளும்
முனிந்துசொன்னேன்கோபமெல்லாம் தணிந்து
திட்டமுடன்இம்மூலி வசியமெத்த [கொள்ளும்
திடமானஉருவதுதான் செய்துகொள்ளு
கட்டிலேயிருக்கின்ற நாயைப்போல
கண்மூடியஞ்சிடுவார் கசடுள்ளோரே.

(இ-ள்.) கட்டியபின் விஷக்கடிகளெல்லாம் நீங்கும் முறைக்காய்ச்சல் ஓடிவிடும். பேய்களெல்லாம் ஆடும் கோபமெல்லாந் தணிந்துவிடும். இம்மூலிகை யானது வசியத்தில் அதிக சிலாக்கியப்பட்டது கட்டிலிருக்கப்பட்ட நாயைப்போல சகலரும் அஞ்சிநிற்பர்.

30. கசடர் வணங்க.

கசடர்க்குயின்னுமொரு மூலிகேளு
கானகத்தில்வாழ்கின்ற செங்கத்தாரி
அசடுதான்போகாமல் ஞாயிறுக்கு
அப்பனேகாப்பணிந்து தூபமிட்டு
அசடுவந்துபோகாமல் மந்திரந்தான்
இம்-உம்-அம்-மென்றுசொல்லி எண்ணிக்கொள்
கசடருக்குஆகுமப்பா பெலியுமீந்து [ளு
கனமாகவைத்திருக்க வணங்குவாரே.

(இ-ள்.) கசடர்களுக்காக இன்னொருமூலிகைக்கேளும் செங்கத்தாரிசெடிக்கு ஞாயிற்றுக் கிழமையில் காப்புக்கட்டி இம் - அம் - உம் - என்று பெலிகொடுத்து வேர்பிடுங்கி வைத்துக்கொள்ள கசடர்வணங்குவார்கள்.

31. எதிராளி வசியம்.

வணங்குவதற்கின்னமொரு மூலிகேளு
மலையடியில்அரசுக்குக் காப்புக்கட்டி
இணங்காதமங்கையுட னூலில்சுத்தி
ஈசன்தனைத்தியானமிட மந்திரந்தான்கேளு

மணங்கோணநின்றுவிடு மைந்தாகேளு
வம்-வம்-றீம்-றீம் நமசிவாயமென்றுவோது
உணங்குவிடும்பேர்களுக்குக் கட்டிப்பாரு
உடல்தடிக்குந்தேகமடா உறுதிபாரே.

(இ-ள்.) மலையடியில் நிற்கும் அரசுக்குக் காப்புக் கட்டி வம்-வம்-றீம்-றீம்-நமசிவாய மென்று ஓதி வேர் பிடிங்கி குளிசம்செய்து மெலிந்தவர்களுக்குக் கட்ட தேகம்பெறுக்கும்.

உறுதியாய்ச்சொன்னத்தி லடைத்துக்கொண்டு
உத்தமனேசிரசிலே இருக்கும்போது
மததியாயெதிராளி நம்மைக்கண்டால் [ட்டும்
வார்த்தைசொல்வா னவனுடன் வருவான்மலைம
திருவானமலையதனில் இருக்கும்மூலி
தேடரியசித்தர்கட்கு கிட்டுமப்பா
கருதியேஅமுர்தமுண்டு கண்டுகொண்டு
கருவானமூலியுட கருத்துகாணே.

(இ-ள்.) ஷை குளிசத்தை சொர்னத்திலடைத்துக் கொர்ண்டு சிரசில்வைத்திருந்தால் யெதிராளி வணங்குவான்.

32. தேவர்வசியம்.

காணப்பாயின்னுமொரு மூலிகேளு
கசடற்றகாவளைக்குக் காப்புக்கட்டி
கோணப்பாமுன்சொன்ன கிழமைபோல
சுத்திவிடுதீபமப்பா சுருதியாக
பேணப்பாபொங்கலொன்று பெலியேயிட்டுப்
பிடுங்கவேமந்திரந்தான் கேளுகேளு
ஊணப்பாஅம்-அம்-யிம்-உம் அம்மென்று
உத்தமனே தானெடுத்து சிமிளிலாக்கே.

(இ-ள்.) காவேளைக்கு முன்சொல்லிய கிழமையில் காப்புக்கட்டி பொங்கல் பெலி தூபதீபம் கொடுத்து

ஷி மந்திரம் அம்-அம்-இம்-உம்-அம் மென்று ஜெபி த்து வேர்பிடிங்கி,

ஆக்கிவிடுசிமிளிலப்பா சொர்னமாகும்
அன்பாகச்சிரசிலே தரித்தாயாகில்
பாக்கியமாங்தேவருட வசியமாகும்
பரிவானசத்துருவும் பயந்துபோவான்
தாக்கிவிடுவெந்நீரில் கொடுத்தாயாகில்
தப்பாதுபேதியாஞ் சார்ந்துபாரு
வாக்கிலேசெய்யான மங்கையர்க்கு
வசிகரமாஞ்சொல்லிவிட்டேன் வகையாய்பாரே

(இ-ள்.) சொர்னத்தி லடைத்துக்கொண்டு சிரசில் தரித்திருக்க தேவர்கள் வசியமாவார்.

33. பேய்பிணிபோகக்குளிசம்.

வகையாகயின்னமொரு மூலிகேளு
மரமானபுங்குக்குக் காப்புக்கட்டி
நிகையாமற்கிழமையப்பா வெள்ளிவாரம்
நிச்சயமாய்த்தூபமிட்டு தீபமேற்றி
முகையாகப்பொங்கலிட்டு பெலியுமீந்து
மூவந்திவேளையிலே பிடுங்கிவந்து
தகையானவிரும்பினிட சத்தில்கட்டில்
தப்பாதுபேய்பிணிகள் சாடிப்போமே.

(இ-ள்.) புங்கமரத்திற்கு வெள்ளிக்கிழமை காப்புக்கட்டி தூபதீபம் பொங்கல் பெலிமுதலியது கொடுத்து அந்திவேளையில் வேர்பிடிங்கி இரும்புதாயத்தைக்குள்போட்டு குளிசம் கட்டிக்கொள்ள பேய் பிணி முதலியது நீங்கும்.

34. பிசாசுவசியம்.

போகவேசொல்லுகிறேன் பாருபாரு
குருந்தொட்டிசெடிதனக்குக் காப்புக்கட்டி

விள்ளுகிறேன்பொங்கலிட்டுக் கடாவும்வெட்டி
வீருகத்துாபதீபங் காட்டியப்பா
கொள்ளுவாய்வேரதனைப் பிடிங்கிமைந்தா
கூரானசிமிளிலே யடைத்துக்கொள்ளு
மெள்ளவேபசாசெல்லாஞ் சொல்லைக்கேட்டு
விரும்பிநிற்குமென்றுசொல்லி விளம்பினேனே.

(இ-ள்.) குருந்தொட்டி செடிக்கி காப்புக் கட்டி பொங்கலிட்டு கடாபெலியீந்து தூபதீபங்காட்டிவேரைப்பிடிங்கி சிமிளில்டைத்துவைத்துக்கொள்ள பிசாசெல்லாம் தன்னுடையவார்த்தையின்படி நடக்கும்.

35. பேய்பூத மாரணம்.

விளம்பினேனின்னமொரு மூலிகேளு
விதமானவாடுதின்னுப் பாலைக்கப்பா
தளம்பெறவேஞாயிறுநாள் காப்புக்கட்டி
தயவாகஉறுவப்பா நூறுபோடு [ன்,றூ
அளம்படவேஓம்-அம்-ஓம்-உம்-அம்-ஹறம்-ஹறம்யெ
அப்பனேதியானமிட்டு பெலியுமீந்து
வளம்பெறவேபிடிங்கியதைக் கன்னிநூலால்
வகையாகத்தானெடுத்து வைத்துக்கொள்ளே.

(இ-ள்.) ஆடுதின்னுப்பாலைக்கு ஞாயிற்றுக்கிழமையில் காப்புக் கட்டி ஓம்-அம்-ஓம்-உம்-ஹறம்-ஹறம்-ஹறம் என்று நூறு உருவுஜெபித்து பெலிகொடுத்து வேரை பிடிங்கி கன்னிநூலால் சுற்றிவைத்துக் கொள்ளவும்.

வைத்தபின்புசொர்னத்தால் சத்திபண்ணி
மகத்துவமாய்த்துாபமிட்டுஅடைத்துக்கொள்ள
வைத்திடவேமாரணமாம் பேய்கள்பூதந்
தாக்கினேன்மெய்ஞ்ஞானச் சார்வுபாரு
முத்துவிலைமதிப்பார்க ளுலகமெல்லாம்
மூடரேஞானத்தை முடிக்கப்போமோ
பத்தியாயிருந்துவிடு எல்லாமாகும்
பரமகுருதாளடியைப் பாடினேனே.

(இ-ள்.) ஷ வேரை சொர்னக்குளிசத்தில் அடைத்து கட்டிக்கொள்ள பேய்பூதம் முதலியதும் வோடிவிடும்.

36. லோகவசியம்.

பாடினேனின்னமொரு மூலிகேளு
பாங்கானதேவியர்க்குக் காப்புக்கட்டி
தேடியேதூபதீபந் தானுமிட்டுச்
சிறப்பாகமந்திரந்தான் செப்பக்கேளு
நாடியேஓம்-ரீங்-ரீங் சிவசிவவென்று
நலமாகப்பொங்கலிட்டு பெலியுமீந்து
பாடியேஉருவப்பா நூற்றுவொன்று
பக்குவமாய்பிடுங்கிநீ நூலால்சுத்தே.

(இ-ள்.) சிதேவிமூலிகைக்கு காப்புக்கட்டிதூபதீபமிட்டு ஓம்-ரீங்-ரிங்-சிவ-சிவவென்று நூற்றியொன்றுஉருவுஜெபித்துவேர்பிடுங்கி மூன்றுவர்னநூலால்சுத்திக்கொள்ளவும்.

சுத்தியேவைத்ததனை எடுத்துக்கொண்டு
தூபதீபங்கொடுத்துச் சிரசில்கட்டி
பத்தியாயிருந்திடுவர் ராசரப்பா
பாங்காகச்சொல்லிவிட்டேன் பாருபாரு
மூத்தியாய்மூலிகையால் உலகமெல்லாம்
மூண்டுவிடுமென்னென்று கேள்வியாகும்
பத்தியாயெண்ணுவித்து பேணுபேணு
பலருக்கும்நல்லவனென்றே பகருவாரே.

(இ-ள்.) ஷ குளிசத்தை தூபதீபங்காட்டிசிரசில்வைத்துச்செல்ல ராஜவசியம் ஜனவசியம்முதலிய சர்வவசியமும் உண்டாகும்.

37. பகைவர்வசியம்.

பகரவேயின்னமொரு மூலிகேளு
பாங்கானசிணுங்கியப்பா காப்புக்கட்டி

நிகரவேபூசையிடு மந்திரந்தான்கேளு
நினைவாக-ஓம்-நீலி-நீலி-சிவ-சிவ-சிவவென்றோது
உகரவேதான்பிடுங்கி கன்னிநூலால்
உத்தமனேதூபமிட்டு வைத்துக்கொள்ளு
தகருமடாஎதிராளி கூட்டிக்கொள்வான்
தப்பாதேசொல்லிவிட்டேன் தாக்கிப்பாரே.

(இ-ள்) தொட்டால் சிணுங்கிக்கு காப்புக் கட்டி ஓம்-நீலி-நீலி-சிவ-சிவ-சிவ - என்று நூறுஉருவ் ஜெபித்து வேர்பிடுங்கி கன்னிநூல்சுத்தி தூபமிட்டு வைத்துக்கொள்ள எதிரிகளெல்லாம் வலிதில்வந்து சினேகம்செய்வார்கள்.

38. அஷ்டசித்திமூலி.

தாக்கப்பாயின்னமொரு மூலிகேளு
சங்கம்வேர்வடபுறத்தில் காப்புக்கட்டி
நோக்குவாய்மந்திரந்தான் சொல்லக்கேளு
ஓம்நொடி-நொடி-சிங்-வங்-அம்-என்றுபோடு
போக்குவாய்பெலிகொடுத்து பிடுங்கிக்கொள்ளு
பொன்னுனசத்தியிலே யடைத்துக்கொள்ளு
வாக்கினுற்சொன்னதெல்லாம் வசியமாகும்
மைந்தனேஅஷ்டமா சித்தியாமே.

(இ-ள்.) சங்கம்வேர் வடபுரத்தில் ஓடுவதற்குகாப்புக்கட்டி ஓம்நொடி-நொடி-சிங்-வங்-அம்என்று நூறு உருவு ஜெபித்து தூபதீபம் பெலிமுதலியது கொடுத்து வேர்பிடிங்கி தங்கக்குளிசத்தில் அடைத்து வைத்துக்கொள்ள வாக்கினுல் சொன்னதெல்லாம் பலிதமாகும் அஷ்டசித்தியுமுண்டாகும்.

39. சர்ப்பம்பிடிக்க மூலிகை.

ஆமப்பாயின்னமொரு மூலிகேளு
அப்பனேசிந்திற்குக் காப்புக்கட்டி
தாமப்பாமூலமென்ற மந்திரந்தான்கேளு
சாதகமாய்சொல்லிவிட்டேன் சார்ந்துபாரு

காமப்பாவம்-வம்-வங்-வங் சிவாவென்று
கருதிவிடுஉறுநூறு காட்டிப்போடு
ஊமப்பாபொங்கலிடு பெலிதானீந்து
உத்தமனேவேர்பிடிங்கி மஞ்சணூல்சுத்தே.

(இ-ள்.) சீந்தில்கொடிக்கி காப்புக்கட்டி வம் - வம் வங்-வங்-சிவாவென்று நூறு உருவு ஜெபித்து பொங்கல் பெலிமுதலியது யீந்து வேர்பிடிங்கி மேலே மஞ்சள்நூல் சுற்றவும்.

சுத்தியேவளையமிட்டு கையில்போட [ம்
துஷ்டனென்றமிருகமெல்லாஞ் சுருங்கிப்போகு
நித்தநித்தந்தியானமிட லோகத்துக்கு
நிசமாகவசிகரமாம் நினைவாய்ப்பாரு
பத்தினியாள்வன்மூலையா ளிட்டசாபம்
பலியாதுமருந்தினிட பாகம்பார்த்து
கர்த்தனைத்தியானமிட்டுக் கிழங்கையுண்ணக்
கைகடந்த விஷமெல்லாங் கதறிப்போமே.

(இ-ள்.) ஷை நூல்சுற்றயவேரை வளையமாகச் செய்து கையில்போட்டுக்கொள்ள சர்ப்பங்களெல்லாம் சுருங்கிப்போகும். ஷை மந்திரத்தை பிரதி தினமும் தியானம்செய்ய லோகவசிகரத்தையும்உண்டாக்கும் இம்மூலிகைக்கு இருக்கும்படியான தேவிசாபத்தை நிவர்த்திசெய்து ஷை கிழங்கை சாப்பிட விஷங்களெல்லாம் தீர்ந்துவிடும்.

40. மிருகங்கள் ஓட மூலிகை.

கதரிப்போமின்னமொரு மூலிகேளு
கருங்காலிவேருக்குக் காப்புக்கட்டி
சிதறியேபோகாமல் பணத்தையொப்பி
ஸ்ரீம்-ஸ்ரீம்-அம்-உம் சிவாயென்றோது
சதுரமடாநெல்லாலே பரத்திக்கொண்டு
சாம்பிராணித்தூபமிட்டுக் கிடாதான்வெட்டி

நிதரியேவேர்பிடுங்கி மயிரில்கட்ட
நிசஞ்சொன்னேன் மிருகமடாகண்டுநில்லே.

(இ-ள்.) கருங்காலிவேருக்குக் காப்புக்கட்டி ஸ்ரீம் ஸ்ரீம்-அம்-உம்-சிவா யென்று நூறு உருவு ஜெபித்து நெல்பரப்பி சாம்பிராணி தூபமிட்டு கிடாவெட்டி வேர்பிடிங்கி மயிரில்கட்ட மிருகமெல்லாம்ஓடும்.

மோகினிக்கும் பேய்களுக்கும் மூலிகை.

நாட்டுகிறேனின்னமொரு முறையேதென்றால்
நலமானவெள்ளடம்பு காப்புக்கட்டி
மூட்டுவாய்மூலமென்ற மந்திரந்தான்கேளு
ஓம்-சி-சி-சி-லல-லல யென்று
கூட்டுவாயுருவப்பா இருநூற்றொன்று
குறையாமல்தியானமிடு அதற்குப்பின்பு
நோட்டமாய்பெலிகொடுத்து தீபமிட்டு
நிலையாகத்தான்பிடுங்கி வைத்துக்கொள்ளே.

(இ-ள்.) வெள்ளடம்புக்குக் காப்புக் கட்டி-ஓம்-சி-சி-சி-லல-லல யென்று 201-ஜெபம்செய்து பெலிகொடுத்து தீபமிட்டு பிடுங்கிவைத்துக்கொள்ளே.

கொள்ளுவாய்தாம்பரத்தில் சத்துபண்ணிக்
கூராகத்தானடைத்து தலையிற்கட்டி
விள்ளுறேன்மோகினியாய் வருகும்பேய்கள்
வினைபில்லிசூனியங்க ளணுகாதப்பா
தெள்ளவேமங்கையர்க்குக் கழுத்திற்கட்ட
தெய்வபக்தியுண்டாகுங் கெர்ப்பமுண்டாம்
வள்ளலென்றவிநாயகனைத் தியானம்பண்ண
வருமொன்றுதிகையுமுன்னே பெருவாள்பிள்ளை

(இ-ள்.) தாம்பரக்குளிசத்தில் அடைத்து தலையில் கட்டிக்கொள்ள மோகினி, பேய், பில்லிசூனியம் முதலியது நீங்கும். மங்கையர்க்கு கழுத்தில்கட்ட தெய்வபக்தி யுண்டாகும். விநாயகனைத் தியானம்செய்ய ஒருவருடத்திற்குள் கெர்ப்பமுண்டாகும்.

41. குழந்தைகளுக்குண்டாகும் சர்வதோஷங்களுக்கும் மூலிகை.

பிள்ளைகட்குவருகின்ற பீடையப்பா
பிறக்கையிலேதூக்கியது பதினறுக்கும்
கள்ளனென்றபிணிதோஷம் மாந்தத்திற்கும்
கால்கையில் முகம்நீர்க்கும் காமாலைக்கும்
மெள்ளவேயின்னமொரு மூலிகேளு
விவரமாய்ச்சொல்லிவிட்டேன் விரும்பிப்பாரு
கிள்ளையரே ஓம்வாவா அஷ்டசித்தி அம்-உம்-சிவா
தியானமிடுவுருவப்பா நூற்றலென்றே [வென்று

(இ-ள்.) குழந்தைகளுக்குண்டாகும் தோஷம், மாந்தம், காமாலைமுதலிய சர்வத்திற்கும் இலுப்பைவேருக்குக் காப்புக்கட்டி ஓம்-வா-வா-அஷ்டசித்தி அம்-உம்-சிவாவென்று நூற்றியொன்று ஜெபம்செய்து,

நூற்றொன்றுஉருவிட்டுப் பூபொங்கல்போட்டு
நுண்மையாய்ப் பொலிகொடுத்து பிடுங்கிக்கொ
மாட்டிவிடுசாம்பிராணி தூபமிட்டு [ண்டு
மாட்டினிடதோலிலே வைத்துத்தைத்து
சேர்த்துவிடுஅரையிலே கட்டிக்கொள்ளு
திறங்கொண்டபேய்களெல்லாம்நசித்துப்போகு
..த்தனென்றரிஷிபூத மணுகாதப்பா [ம்
குழந்தைகட்குமிதுவாகுங் கூறினேனே.

(இ-ள்.) பொங்கல் பெலி முதலியது கொடுத்து வேர் பிடிங்கிக்கொண்டு சாம்பிராணிதூபமிட்டு மாட்டுத்தோலில்வைத்துத்தைத்து குழந்தைகட்கு அரையிலேகட்ட சர்வதோஷங்களும் வியாதிகளும் நீங்கிவிடும்.

42. முடக்கொத்தான்.

முறையாகயின்னமொரு மூலிகேளு
முடக்கொத்தான்மூலிக்குக் காப்புக்கட்டி

உரையாகஉரைத்துவிட்டேன் வாரம்செவ்வாய்
உத்தமனேசொல்லுகிறே னுறுதிகேளு
மறைவல்லமூலமென்ற மந்திரந்தான்கேளு
மாசி-மாசி-தூமாதேவி வலிசுடு-வவிசு - அம்-சிவ
கரையடாஉருநூறு ஜெபமேபண்ணி [வென்று
கருதியேபிடுங்கிவிடு கருத்தைப்பாரே.

(இ-ள்.) செவ்வா யன்றைக்கு முடக்கொத்தானுக்குக் காப்புக்கட்டி மாசி-மாசி - தூமாதேவி - வலிசுடு வவிசு-அம்-சிவ வென்று நூறு உருவு ஜெபம்செய்து வேர் பிடிங்கிக்கொள்ளவும்.

பாரப்பாயின்னமொன்று யேதேயாகில்
பரிவானதங்கத்தால் சத்துபண்ணி
நேரப்பாசத்திலே யடைத்துக்கொண்டு
நிலையாகதூபமிட்டு தலையிற்கட்ட
காரப்பாவசிகரமு மாகுமாகும்
கைகண்டமுறைசொன்னேன் கண்டுபாரு
பேரப்பாபுதைத்துவிடு பேய்களெல்லாம்
பிசாசவன்பக்கவிலே யணுகாதென்றே.

(இ-ள்.) மேற்படி வேரை தங்கத் தாயத்தைக்குள் அடைத்துக்கொண்டு தூபமிட்டு தலையில் வைத்துக்கொள்ள வசிகரமுண்டாகும் பேய்பிசாசுகள் அவன் பக்கத்தில் அண்டாது.

43. கிலு கிலுப்பை.

அணுகாதுயின்னமொரு முறையைக்கேளு
அப்பனேகிலுகிலுப்பைக்குக் காப்புக்கட்டி
அணுகியேசாம்பிராணி தூபமிட்டு
அப்பனேபொங்கலிட்டுப் பெலியுமீந்து
அணுகியேமூலமென்ற மந்திரந்தான்கேளு
ஓம்-அம்-யீம்-உம்-சிம் ரர-ரர-வாசிவவென்று
அணுகியேயருமலத்தைப் பிடிங்கிக்கொண்டு
அருளாகத்தூபமிட்டுத் தலையில்கட்டே.

(இ-ள்.) கிலுகிலுப்பைக்குக் காப்புக்கட்டி சாம்பிராணிதூபங்கொடுத்து பொங்கல் பெலி முதலியதுங் கொடுத்து ஓம்-அம்-யீம்-உம்-சிம்-ரா-ரா-வா சிவ வென்று வேர்பிடுங்கி தூபமிட்டு தலையில் கட்டிக்கொள்ளவும்.

கட்டியபின்னதனுடைய குணமேதென்றால்
　காளிதுர்க்கைசாமுண்டி யணுகாதப்பா
கட்டியபின்பூதமுதல் மிருகமெல்லாங்
　காணுமலோடிவிடுங் கண்டுபாரு
கட்டியபின்யாராவ தேவல்செய்தால்
　கரையோரானெதிராளி கரைந்துபோவான்
கட்டியேமனையதனி லிருந்தாராகில்
　கட்டானபேய்பிணிக ளண்டாதென்றே.

(இ-ள்.) கட்டியதினால் குணமேதென்றால்காளிதுர்க்கை சாமுண்டி முதலியதுகள் அணுகாது பூதமுதல் மிருகமெல்லாம் காணும லோடிவிடும் யாராவது ஏவல்முதலியதுசெய்தால் பலியாது ஷை ஏவல்முதலியது இவனுக்கு அண்டாது எதிராளியும் கரைந்து போவான் ஷை வேர் மனையில் யிருந்தால் ஷை மனையில் பேய் பிணிகளும் அண்டாது.

44. கத்தரி.

அண்டாதுயின்னமொரு மூலிகேளு
　அறியவேசொல்லுகிறே னரசர்க்காகும்
விண்டேனுன்கத்தரியின் பூடுக்கப்பா
　வியாழமென்றகிழமைக்குக் காப்புக்கட்டி
நின்றங்கேயர்ச்சிக்கும் மலரைக்கேளு
　நிலையான ஆவரையின் பூவேயாகும்
உண்டானமந்திரந்தா னேதேயாகில்
　உத்தமனேசொல்லுகிறே னுணிக்கேளே.

கேளப்பாமந்திரந்தா னெப்படியேயாகில்
கெடியாகச்சொல்லுகிறேன் கிணித்துத்தானே
வாளப்பா ஓம்-நமசிவய-அய்யும்-இறியும்
அம்-அய்யுங்கிலியுஞ் சிவாவென்று
தாளப்பாவுருவிடு நூற்றிவொன்று
தப்பாதேபொங்கலிட்டு பெலியுமீந்து
காளப்பாஞாயிறிலே தீபமிட்டு
நலமாகப்பிடிங்கிவிடு நன்றாய்த்தானே.

நன்றாகச்செம்பினிட சத்திலிட்டு
நலமானசூதமப்பா கொஞ்சம்விட்டு
ஒன்றாகத்தான்சேர்த்து அடைத்துக்கொள்ள
உத்தமனேசிரசிலே யிருக்கும்போது
பண்டாகப்பழிசெய்த பேர்களெல்லாம்
பக்கமேவந்தணைவார் பாருபாரு
உண்டானபடிசொன்னேன் மைந்தாகேளு
உருவிட்டுஎட்டிலொன்று பூசைபண்ணே.

(இ-ள்.) இன்னுமொரு மூலிகையைச் சொல்லக் கேளு. கத்தரிச்செடிக்கு வியாழக்கிழமை காப்புக்கட்டி ஆவாரம்பூவினால் அர்ச்சனைசெய்து ஓம்-நமசி[illegible]ய அய்யும்-இறியும்-ஐயும்-கிலியும்-சிவா வென்று நூற்றி யொன்று (101) உருவுசெபித்து பொங்கல்பெலி[illegible]த லியதுகொடுத்து வேர்பிடிங்கிகத்திரித்து செம்ப[illegible]க்கு ழையில் அடைத்து அத்துடன் கொஞ்சம் பாத[illegible] ச[illegible] உள்ளேவிட்டு மூடி அடைத்துக்கொண்டு சிரசிலே வைத்து யிருக்கும்போது பழிசெய்த பகையாளிக ளெல்லாரும் பக்கத்தில்வந்து மித்துருவாகச் சேர் வார்கள்.

45. கருவூமத்தை அஞ்சனம்.

காணவேஎன்னுடைய முறையைக்கேளு
கருவானஊமத்தின் தைலம்வாங்கி

கோணவேகும்மட்டிவேர் பிடுங்கியேதான்
குறுகவேநறுக்கியதைக் கருக்கிக்கொண்டு
ஊணவேயேரண்ட நெய்யைவிட்டு
உத்தமனேமத்தித்துக் கையிற்போட
பேணவேகையிலிட்டுப் பார்க்கும்போது
புறத்திலேவெளிச்சமொன்று காணலாமே.

(இ-ள்.) ஊமத்தையை தைலம்வாங்கி கும்மட்டி வேரைநறுக்கி கரியாகயெரித்து ஷீ தைலமும் ஏரண்டத்தைலமும் விட்டு மத்தித்து மைசெய்து வைத்துக்கொண்டு உள்ளங்கையில் தடவிப்பார்க்க அஞ்சனம் ஓடும் வெளிச்சம் தெரியும்.

46. நீர்மேல்நெருப்பு.

வெளிச்சமாய்ச்சொல்லுகிறேன் மைந்தாகேளு
விதமானநீர்மேலின் நெருப்பைவாங்கி
வளியோடுமூலமென்ற மந்திரத்தைச்சொல்லி
வகையாகத்தூபமிட்டு எடுத்துக்கொண்டு
களியடாயானைக்கண் சட்டிதன்னில்
கருக்கியமையெடுத்து யேரண்டநெய்யில்
இழையடாஉள்ளங்கை முகத்திலிட்டு
யின்பமாய்த்தாேனுக்கக் குருவைக்கேளே.

குருவாகயிதற்கெல்லா மந்திரமேவுண்டு
கொள்கையாய்ச்சொல்லுகிறேன் கூடிப்பாரு
ஒருகாலேமூலமென்ற மந்திரத்தைக்கேளு
ஓம்-மாயி-மாயி-மாயாகுண்டலி அம்சிவவென்று
உருவப்பாநூற்றொன்று தியானம்பண்ணி
உத்தமனேசாரணைக்குக் காப்புகூடி
மருகவேபிடுங்கியதை பெலியுமீந்து
மைந்தனேவேர்பிடுங்கி வைத்துக்கொள்ளே.

(இ-ள்.) நீர்மேல் நெருப்புக்கு மூலமந்திரத்தைச் சொல்லி யெடுத்துக்கொண்டு யானைக்கண் சட்டியில்

கருக்கி மையெடுத்து யேரண்டநெய்யில் குழைத்து உள்ளங்கையிலிட்டு மூலமந்திரம் ஓம்-மாயி-மாயி-மாயாகுண்டலி அம்-சிவ-வென்று நூற்றியொன்று(101) தியானம்ஜெபித்து பார்க்க அஞ்சனம்ஓடும்.

47. சாறணைமை.

வேரானசாரணைவேர் வெள்ளெருக்கின்வேரும்
மேலானகவிழ்தும்பை வேருங்கூட்டி
கூறுகயிடித்ததனைப் பொடியேபண்ணி
குறையாமற்றான்கரிக்கி யெடுத்துக்கொண்டு
மாராளேகாரெள்ளுத் தைலம்வாங்கி
மைந்தனேயிழைத்துநன்றாய்வைத்துக்கொண்டு
சேரப்பாஉள்ளங்கை முகத்திற்போட்டுத்
திறமாகப்பார்க்கவே யோடுங்காணே.

(இ-ள்.) சாரணைக்கு நீர்மேல் நெருப்புக்கு செய்தைதைப்போல்செய்து உருவுஜெபித்து காப்புக்கட்டிபெலிகொடுத்து வேர்பிடுங்கிக்கொண்டு அத்துடன் வெள்ளெருக்கன்வேரும் கவிழ்தும்பைவேருங்கூட்டிபொடிசெய்து கரியாகும்படி கரிக்கி யெடுத்துக் கொண்டு காரெள்ளுத் தைலம்விட்டுக் குழைத்து மைசெய்து வைத்துக்கொண்டு உள்ளங்கையில்தடவிபார்க்கஅஞ்சனம்ஓடும்.

48. நரிமிரட்டிமை.

ஓடுங்காண்தூரமென்ன வென்றாபாகில்
உத்தமனேயடியேழா மோட்டமாகும்
நாடுவாயின்னமொரு வகைமைக்கேளு
நரிமிரட்டித்தனக்குமே காப்புக்கட்டி
மாடுவாய்பெலிகொடுத்து தூபமிட்டு
வரிகிழங்கின்சாரதிமேல யூரவிட்டு
கூடுவாயுலர்த்தியதை யெடுத்துக்கொண்டு
குறையாமற்கருக்கிவிட்டு மையைவாங்கே.

வாங்குவாய்மையெடுத்து வைத்துக்கொண்டு
ஷைந்தனேஏரண்டத் தைலமூட்டி
தாங்குவாய்விழியிலே மையுமூட்டி
சத்தியைத்தான் தியானமிட்டுத் தாக்கிப்பாரு
ஏங்கிடாதிந்தவண்ணஞ் செய்தாயாகில்
என்மகனேசித்திக்கும் யாவுங்கண்டீர்
தூங்குவாய்நிதிகளெல்லாங் காணலாகுஞ்
சூட்சமாய்சொல்லிவிட்டேன் சுருதிபாரே.

(இ-ள்.) நரிமிரட்டிக்கி காப்புக்கட்டி பெலிகொடுத்து வேர்பிடிங்கி வரிகிழங்கின் சாற்றிலே யூரப்போட்டு எடுத்து கருக்கி ஏரண்டத்தைலம்விட்டு மைசெய்து சத்தியைத் தியானஞ்செய்து போட்டுப் பார்க்க அஞ்சனம் ஓடும்.

49. அமுக்கிருமை.

பாரப்பாயிதன்மேலே யின்னங்கேளு
பரிவாகஞாயிறுநாள் காப்புக்கட்டி
நேரப்பாயமுக்கிரு பிடிங்கிமைந்தா
நிலையாகத் தூபமிட்டு வைத்துக்கொண்டு
சேரப்பாபூனைக்கண் ஆனைக்கண்ணும்
திரமாகத்தானெடுத்துப் பொடியேபண்ணி
மாரப்பாஏரண்டத் தைலம்விட்டு
மைந்தனேகுழப்பிநன்றாய் வைத்துக்கொள்ளே.

கொண்டபின்புநெற்றியிலே திலதம்போடு
கூடியேஉள்ளங்கை முகத்திற்போடு
விண்டேனுன்மையுடைய ஓட்டப்பாரு
வெளியாகும்வெள்ளிமீ னொளிவுகாணும்
நன்றாகப்பார்த்துவிடு பாதாளத்தை
நாயதுபோல்பறித்துவிடும் நடக்கும்பாரு
உண்டானபடிசொன்னேன் மைந்தாகேளு
வுருவாகும்வாலையுட வொளிவுகாணே.

(இ-ள்.) அமுக்கிரு செடிக்கு ஞாயிற்றுக் கிழமையில் காப்புக்கட்டி தூபதீபம்கொடுத்து வேர்பிடிங்கி

எடுத்துக்கொண்டு கரிக்கிஅத்துடன்பூனைக்கண்ணும் ஆனைக்கண்ணும் சேர்த்து ஏரண்டத்தைலம் விட்டு குழப்பி வாலைபூஜைசெய்து வைத்துக்கொண்டு நெற்றியிலிட்டு உள்ளங்கையில் ஷை மையைத்தடவிப்பார்க்க பாதாளஅஞ்சனமுதல் சர்வஅஞ்சனமும்ஓடும்.

50. காவேளைமை.

காணப்பாசொல்லுகிறே னின்னங்கேளு
காவளையின்வேருக்குக் காப்புக்கட்டி
தோணப்பாஞாயிறிலே பொங்கல்போட்டு
சொல்லுகிறேன்பலிகொடுத்து தீபமேற்றி
ஊணப்பாநன்றாக வெடுத்துக்கொண்டு
உத்தமனேசாரணைவேர் கொஞ்சங்கூட்டி
வாணுவமாய்க்கருக்கியதை யெடுத்துக்கொண்டு
மைந்தனேசிமிளிலே யடைத்துக்கொள்ளே.

கொள்ளப்பாவதன்பிறகு கழுகின்கண்ணுங்
கூரானவாந்தையுட கூகைக்கண்ணும்
விள்ளுகிறேனிவையெல்லாம் பொடியாய்பண்ணி
விவரமாய்த்தானெடுத்து வைத்துக்கொண்டு
துள்ளவேயேரண்ட நெய்யில்மைந்தா
சுருதியாய்மத்தித்துப் பூசைபண்ணு
மெள்ளவேமந்திரந்தானேதேயாகில் [ன்றுபோடே
ஓம்வீசு அஞ்சனுதேவி இரியும்கிரியும்ஆம்சிவவெ

போட்டபின்புஒளிகாணும் பாதாளங்காணும்
புகழாகநிதிகளெல்லாம் வெளியாய்க்காணும்
ஆட்டப்பாஅண்டத்தி னுண்மைகண்டால்
அறியலாமப்படியே சிவமும்வேணும்
தீட்டுவாய்சிகாரவறை தோற்றம்பாரு
சிவசிவாஎன்னவைகள் தோஷநிறம்பாரு
மூட்டுவாயுருவப்பா நூற்றுவொன்று
முறையொன்றுந்தப்பாதே முசிவாய்ப்பாரே.

(இ-ள்.) கர்வேளைவேருக்கு ஞாயிற்றுக்கிழமை காப்புக்கட்டி பொங்கல்பெலி தூபதீபங்கொடுத்துவேர் பிடிங்கி அத்துடன் சாரணைவேர்கொஞ்சங்கூட்டிகருக்கிக்கொண்டு இத்துடன் கழுகுகண், ஆந்தைக்கண், கோட்டான்கண், இவைகளையுஞ்சேர்த்து எரண்டத்தெண்ணைவிட்டு மைசெய்துவைத்து அஞ்சனாதேவி மந்திரம் ஓம்லீசு அஞ்சனாதேவி இரியும் கிரியும் ஆம் சிவவென்று நூற்றியொன்று 101-உருவு ஜெபித்துப் போட்டுப்பார்க்க உலகமெல்லாம் அஞ்சனம்ஓடும்.

51. தீண்டாப்பாளைமை.

இருந்துவிடு அதன்பிறகு மையைக்கேளு
இதமானபுற்றின்மேல் தீண்டாப்பாளை
திருந்தவேசுழல்வண்டு யிதுகள்ரெண்டுஞ்
சேர்த்துமேகருக்கியிடு மைபோலாக்கு
விரும்பிவிட்டுநிலப்புரண்டி யாளிக்கண்ணும்
வெண்ணையைப்போல் பொடிபண்ணி வைத்துக்
அரும்பானயானைக்கண் சட்டித்தாறில் [கொண்டு
அப்பனேமையெடுத்து வைத்துக்கொள்ளே.

வைத்தபின்பேரண்டத் தைலங்கூட்டு
மைந்தனேகுழைத்துநன்று யெடுத்துக்கொண்டு
பத்தியாய்தியானத்தை உபதேசித்துப்
பார்க்கவேவகைவிட்டு ஓடும்பாரு
சத்தியமாய்ச்சொன்னண்டா விந்தமார்க்கம்
சரியாகும்சிகாரமதை யுச்சரிப்பாய்
வெற்றிலையிலிட்டாலும் தூரங்காணும்
விதஞ்சொன்னேனிதியெடுக்க விபரங்காணே.

(இ-ள்) புற்றின்மேல் முளைத்திருக்கும் ஆடுதீண்டாப்பாளைக்கு காப்புக்கட்டி வேர்பிடிங்கி அத்துடன் சுழல்வண்டும் நிலப்புரண்டியும் யாளிக்கண்ணும்சேர்த்து யானைக்கண்சட்டியில் கருக்கி எரண்டத்தைலம் விட்டு மைசெய்து சிம்-என்று ஜெபித்து வைத்துக்கொண்டு வெற்றிலையில்தடவிப்பார்க்க அஞ்சனம் ஓடும்.

52. எருக்கு அஞ்சனம்.

விபரமாய்முறையுண்டு பின்னங்கேளு
 வெள்ளெலியின் வயிற்றிலுள்ள கருவைவாங்கி
தவராதேபுற்றின்மேல் முளைத்திருக்கும்
 தனியானஎருக்குக்குக் காப்புக்கட்டி
சவுருமற்பெலிகொடுத்துத் தீபமிட்டுக்
 கையினாற்றொடாமலதை பிடுங்கிக்கொண்டு
நிகராதரவியிலே யுலர்ந்தபின்பு
 நிச்சயமாய்தானெடுத்துப் பொடிதான் பண்ணே

பண்ணவேயிதையெடுத்து வைத்துக்கொண்டு
 பாங்காகதலைகீழாய்த் தூங்கும்பக்ஷி
எண்ணவேசமூலமைப்பா நெய்யிறக்கி
 யிதமாகத்தானெடுத்து குழைத்துப்போடு
வண்ணமுடன் கைபாகம் பிசகிடாமல்
 மைந்தனே சூட்சமதை யறிந்துமேதான்
நண்ணுமடாநாழிகேதா னென்றுதாரம்
 நடக்குமப்பாவனுமனுட மையுமாமே.

மைக்கெல்லாம் அனுமனன்றி வேறேயில்லை
 மாயத்தைக்காணும லறிந்துகெட்டார்
கைக்கெல்லாம்வாலையன்றி வேறேயில்லை
 காணார்கள் கடைகெட்ட வண்டரப்பா
பைக்கெல்லாம்சிவனறிவே வேறேயில்லை
 பார்த்திருந்துந்தெரியாது பாவிமார்க்கு
மெய்க்கெல்லாம்வாலையன்றி வேறேயில்லை
 விளம்பினேன்விவரமா யறிந்துகொள்ளே.

(இ-ள்.) புற்றின்மேல் தனியாக முளைத்திருக்கும் வெள்ளெருக்கன்செடிக்கு காப்புக்கட்டி பெலிகொடுத்து தூபதீபமிட்டுகையினால்தொடாமல் ஏதாகிலும் ஆயுதத்தால் பிடுங்கிக்கொண்டு ரவியில்உலர்த்திபொடிசெய்துக்கொண்டு இத்துடன் வெள்ளெலியின் வயிற்றிலுள்ள கருவையுஞ்சேர்த்து வௌவாலின்நெய்யி

ஞல் குழைந்து கைபாகம் பிசகாமல் மைசெய்துவை த்துக்கொண்டு அநுமார்மந்திரம் ஜெபித்து திலர்தம் போட்டுபார்க்க மையோடும்.

53. தாமரைமை.

அறிபவேயின்னமொரு முறைதான்கேளு
அடுக்கானதாமரையின் வித்தைவாங்கி
குறிபாகவாள்மிரட்டி வித்திஞேடு
குறையாமற்ருன்றாக்கி யிடித்துக்கொண்டு
மறியவேகுழித்தைல மிறக்கிமைந்தா
வகைபாகத்தான்வாங்கி எடுத்துக்கொண்டு
கரியானயாளியுட நெய்யுலர்த்திக்
கடுகவேதான்பொடித்து வைத்திடாயே.

வைப்பாயானைக்கண் சட்டித்தூறில்
மைந்தனே தடவியதை எடுத்துக்கொண்டு
உய்யவேகற்பூர விளக்குமேற்றி
யுத்தமனேகருப்பற்றி எடுத்துக்கொண்டு
டையவேஏரண்டத் தைலங்கூட்டு
பாங்காகமத்தித்துக் கையிற்போடு
நெய்யடாநெற்றியிலே திலர்தம்போடு
நேராகமின்னுகிற மின்னைப்பாரே.

மின்னப்பாபூரணத்தின் சந்திரன்போல
வெளிச்சமடா நாழிகைதான் மூன்றுக்குள்ளே
மின்னப்பாபக்கமாய் மின்னும்பின்பும்
வெளிகாணுமென்றுசொல்லி மயங்கிடாதே
மின்னப்பாதாளம் திறந்துபோகும்
வெளிகண்டமட்டுமடா விவரமாகும்
மின்னப்பாயிருக்கிற பொருளையெல்லாம்
வேரோடேபிடுங்கிவிடும் விவரந்தானே.

விவரமாயெடுத்துநீ வைத்துக்கொண்டு
விமலியென்றவாலைக்குக் கோயில்கட்டு

தவராதேதான்மிகுங் கொடுமையாகா
  தாய்தந்தைகுலத்துக்குச் சாபமுண்டாம்
பகரவேசொல்லிவிட்டேன் மைந்தாகேளு
  பரத்துக்கேதானமிடு பாவந்தீரும்
கவருதேயுந்தனுக்கு நன்றாய்ச்சொல்லுங்
  கருதியேநின்றக்கால் காணலாமே.

(இ-ள்.) தாமரைவித்தும் நரிமிரட்டிவித்தும்யிரண்டும் சரியிடையா எடுத்துக்கொண்டு தூள்செய்து கலசத்திலிட்டு குழித்தைலம் இறக்கி யானைக்கண்சட்டிக்கு தடவி கற்பூரவிளக்கு ஏற்றி மைபிடித்து கொஞ்சம் யோண்டத்தைலம்விட்டுக் குழைத்து நெற்றியிலேதிலர் தமிட்டு உள்ளங்கையில்தடவிப்பார்க்க அஞ்சனம்ஒடும் பாட்டிலுள்ள மற்றவிஷயங்களில் சீடனுக்கு புத்திகூறுகின்றார்.

54. வேங்கைமை.

காணவேயின்னுமொரு மையைக்கேளு
  கருவேங்கைவித்தப்பா பலமோவொன்று
தோணவேசிறுவழிஞ்சல் விரைபலமோவொன்று
  துடியானநீர்முள்ளி விரைபலமோவொன்று
ஊணவேயிவையெல்லாந் தூளாய்த்தாக்கி
  யுத்தமனேதைலத்தை எடுத்துக்கொண்டு
பேணவேகாராட்டுக் கண்ணும்வேணும்
  பேசாதேகாடையுட கண்ணும்வேணும்.
வேணுமப்பாகருநாயின் கண்ணும்கூட்டி
  வேதையென்றரவியிலே யுலர்த்திக்கொண்டு
பேணுநீபொடிபண்ணி வைத்துமைந்தா
  பேசாமல்தியானமிடு யதற்குப்பின்பு
தோணுநீயானைக்கண் சட்டித்தாறில்
  சொல்லுகிறேன்மைதடவிச் சூடனேற்றி
காணுநீயேரண்டத் தைலம்விட்டுக்
  கையாலேமத்தித்து தாபமேற்றே.

ஏற்றியபின்வாலேக்குத் தியானம்செய்து
யிதமாகக்கையிலிடு காதமோடும்
மாற்றிவிடும்பாராதே மையிதுதான்சொன்னேன்
மைந்தனே வைத்ததெல்லாம் வெளியிற்காணும்
மேற்றிவிடுமையதுவே சுப்பிரமணியர்
மேலானபொருளெல்லாங் காட்டுவார்பார்
ஆத்துமத்துக்கிதுவுமொரு வசிகரமுமாகும்
அப்பனேநீயறிந்து அறிவினாலே.

(இ-ள்.) கருவேங்கைவித்து பலம்ஒன்று,சிறுஅழிஞ்சிவிரைபலம் ஒன்று, நீர்முள்ளிவிரை பலம் ஒன்று, இவைகளை தூள்செய்து குழித்தைலம் இறக்கிக்கொண்டு காராட்டுக்கண்ணும் காடைக்கண்ணும்,கருப்பு நாயின்கண்ணும் மூன்றையுங்கூட்டி வெய்யலில்உலர்த்தி ஷை வித்துகளின் தைலம் விட்டு அரைத்து மைபோல்செய்து யானைக்கண் சட்டிக்குத்தடவிகற்பூரம் கொளுத்திவைத்து மைபிடித்துக்கொண்டு கொஞ்சம் ஏரண்டத் தைலம்விட்டு மைகுழப்பி வைத்துக்கொண்டு பூஜைசெய்து போட்டுப்பார்க்க அஞ்சனம்ஓடும் நெற்றியிலிட்டுச்செல்ல வசிகரம்உண்டாகும்.

55. மூடக்கத்தான்மை.

கேளப்பாமுடக்கொத்தான் கீழ்க்காய்நெல்லி
கெடியானகன்னிநூல் காப்புக்கட்டி
வாளப்பாஎட்டாநாள் வாரஞ்செவ்வாய்
விதமாகப்பெலிகொடுத்து பிடுங்கிமைந்தா
தாளப்பா கருக்கியதை யேரண்டநெய்யில்
தனியாகத்தான்குழைத்துமுன்னெய்யுங்கூட்டி
வாளப்பாகையிலிட்டு நிதியைநோக்கி
மகத்துவமாய்த்தானெடுத்து வைத்துநில்லே.

(இ-ள்.) முடக்கொத்தானுக்கும் கீழ்க்காய்நெல்லிக்கும் செவ்வாயன்றைக்குக் காப்புக்கட்டி மறுசெவ்வாயில் பலிகொடுத்து வேர்பிடிங்கி கருக்கி யேரண்ட

கெய்யில் குழைத்து மைதில்போட்டுப்பார்க்க அஞ்சனம் ஓடும்.

56. பேய்களுக்குப்பூசை.

இல்லப்பாயிதன்றிக்கெல்லாம் பூசையுண்டு
　　இதிகாக்கும்பேய்களுக்கு கொடுக்கவேண்டி
சொல்லப்பாகிடாவொன்று பறவையொன்று
　　சோறுக்கு அரிசிபடா செந்தாமரையாகும்
வெல்லப்பா ஆணியா யிரும்புமாகும்
　　மேல்விழுகும்ரிஷிகளுக்குப் பூசையப்பா
எல்லைவிட்ட கன்றுவிடுமே யிதனைக்கண்டு
　　எடுத்துக்கொள்ளிகிஎல்லா மிதனுசொன்னோமே

(இ-ள்.) புதையல்காக்கும் பேய்களுக் கெல்லாம் பூசையுண்டு அதாவது கிடாவொன்று, கோழிஒன்று, அரிசிசமையல்செய்து செந்தாமரைபுஷ்பம்செவ்வலரி புஷ்பம்போட்டு அத்துடன் இரும்பு ஆணியும்போட்டு பூசைக்கொடுக்க மேலேவிழுவதற்கு வரும்பேய்களெல்லாம் விலகிவிடும் அபயமாய் புதையல் எடுக்கலாகும்

57. கொடுவேலிமை

பாரப்பாயின்னமொன்று மைமைக்கேளு
　　யாங்கானகொடிவேலி குப்பமேனி
சோப்பாசாணவேர் வெள்ளியாகுக்
　　திடமாகக்கருக்கியதை எடுத்துக்கொண்டு
கூரப்பாகர்ப்பூரம் பச்சைவாங்கிக்
　　குறையாமலவிளக்கேற்றி மைபதத்தலைத்து
சேரப்பாஎடுத்ததனை வைத்துக்கொண்டு
　　நிலையாகவாண்ட தெய்வமவாங்கே
செய்யப்பாவாங்கியபின் மையைக்கூட்டி
　　கெடுத்தககாணந்து வைத்துக்கொண்டு
கையப்பாயிருபுறமுன் தடவமைவைக்
　　கண்தெறிக்கத்தான்பாரு மின்னல்காணும்

பொய்யப்பாசொல்லவில்லை யென்றன் னூலில்
புண்ணியங்கள் செய்தவர்க்கு யின்னூல்கிட்டும்
மெய்யப்பாசொல்லிவிட்டே னின்னூல்கண்டு,
விரும்பியேசமையப்பார்த்தோர் குருவானாரே.

(இ-ள்.) வெள்ளிக்கிழமையன்று கொடிவேலிகுப்பமேனி சாரணை இதுகளுக்கு காப்புக்கட்டி. வேர்பிடுங்கி எடுத்துக்கொண்டு பச்சைக்கர்ப்பூரம்சேர்த்து மை பற்றவைத்து பேரண்டெண்ணையில்குழைத்து ஐந்து நாள்வரையில் பூசைசெய்து பிறகு போட்டுப்பார்க்க அஞ்சனம் ஓடும்.

58. மைபார்க்கத் தகுந்தவர்கள்.

காலைப்பாகாலுமுந்திப் பிறந்தோனுருங்
கண்ணப்பாகடுநெற்றிப் புருவமாரும்
தோணப்பாதலைப்பிள்ளை யுதிரக்கண்ணன்
தாகுமேமிகக்கண்ணன் வெள்ளிக்கண்ணன்
னணப்பாயிப்படியே நாலுநன்று
உத்தமமேனயிதுவன்றி பொன்னுமாகா
பேணப்பாயிவர்களுக்கு முழுகக்கேளு
பேரானபெண்ணையொன்று மாகாதென்றே.

(இ-ள்.) கால்முதலில் பிறந்தவன் தலைப்பிள்ளையாய்ப்பிறந்தவன் இரத்தக்கண்ணன் பூனைக்கண்ணன் இந்நால்வருக்குமே அஞ்சனமை நன்றாயோடும் இவர்கள் தலைமுழுக எண்ணையொன்றுண்டு.

59. மைபார்க்கும் மனிதர்க்கு தலைமுழுகும் எண்ணை.

ஆகுமப்பாதைலமுண்டு சொல்லக்கேளு
அழிஞ்சிலுடவித்தையப்பா படிதான்பத்து
தாகுவாய்ப்பொன்னாங்கின்னிச் சமூலமப்பா
சரியாகப்பலம்பத்து பிடிங்கிமைந்தா

பாகுபோல்காய்ச்சிவிடு பிழிந்துகொண்டு
பாகமாய்மிளகடா பலமோவொன்று
மேருவாய்பொடித்ததனை மேலேதூவி
விவரமாய்த்தான்குலுக்கி வைத்துக்கொள்ளே.

வைத்தபின்புதைலத்தை மூன்றிலொன்று
மைந்தனேகண்தெரியும் வகையாயோடும்
கைத்திரத்தான்மாய்பாரு விழியாற்காணும்
சாற்றுகிறேன்வருஷமொன்று முழுகும்போது
பத்திவிடும்தேகத்து ரோமமெல்லாம்
பறந்துவிடும்சொல்லுகிறேன் பாருபாரு
நித்தமப்பாமுழுகினால் மெத்தநன்று
நிசஞ்சொன்னேன் தப்பாது நினைவாய்ப்பாரே.

(இ-ள்.) அஞ்சிவிரைபடி (10) சமனிடை பொன்னாங்கண்ணி சமூலம் பசும்பால் சேர்த்திடித்து ரசம் பிழிந்துகொண்டு அத்துடன் எள்ளெண்ணைசேர்த்து தைலம்காய்ச்சி வடித்து ஸ்நானஞ்செய்துவர கண் துலக்கமாகும் திரேகத்திலுள்ளரோமமெல்லாம் உதிர்ந்துவிடும் மைநன்றாய்த்தெரியும்.

மூலிகைஜாலரத்தினம்

இரண்டாம்பாகம்

முற்றிற்று.